


உ




# பூர்ணபலம்

## ஆன்மீக மின் சஞ்சிகை (SPIRITUAL E-MAGAZINE)

ஸ்ரீமஹாபெரியவா வேத வ்ருக்ஷ சம்ரக்ஷண சங்கம் டிரஸ்ட் மாதவெளியீடு

(வைகாசி – MAY – 2022)

ஸ்ரீ மகாபெரியவா பூர்ண பலத்துடன்



"லோகா சமஸ்தா சுகினோ பவந்து"

"நன்மையும் செல்வமும் நாளும் நல்குமே
தின்மையும் பாவமும் சிதைந்து தேயுமே
சென்மமும் மரணமும் இன்றித் தீருமே
இம்மையே இராம என்ற இரண்டெழுத்தினால்"

# உள்ளடக்க அட்டவணை


தோரணவாயில் ........................................................................................................ 4

அஸ்வத்தம் (அரச மரம்) / பலாசம் (புரச மரம்) ........................................................... 7

அரிய ஆலயமும் அற்புத தகவல்களும் ............................................................................ 8

காஞ்சி வரதர் கருடசேவை (தொட்டாச்சார்யார் சேவை) ................................................. 10

அன்னதான சிவன் ............................................................................................................ 11

எந்தரோ மஹாநுபாவலு .................................................................................................. 12

புண்ணியத்தைப் புரிந்து கொள் ....................................................................................... 17

பலன் தரும் பதிகங்கள் .................................................................................................... 19

தெரிந்த புராணம், தெரியாத கதைகள் ............................................................................. 23

நூறாண்டு ஜோதி ............................................................................................................. 24

ஓவியர் சிற்பியின் கைவண்ணம் ...................................................................................... 37

இந்த ஆன்மீக மின் சஞ்சிகை விற்பனைக்கு அல்ல.

ஆசிரியர்: கி. வேணுகோபால்
இணைஆசிரியர்: ச. இராஜலக்ஷ்மி

எண்ணம்மற்றும்வடிவம்: VVSS Trust-இன்நண்பர்கள்

அட்டை மற்றும் பக்கங்கள் 4, மற்றும் 23-இல் உள்ளபடங்கள் அனைத்தும் கூகிள் படத்தேடல் (Google Image Search) மூலமாய் பெற்றவை. இவை விளக்க நோக்கத்திற்காக மட்டுமே.

மற்ற படங்களின் அனைத்து உரிமைகளும் ஸ்ரீ மஹாபெரியவா வேத வ்ருக்ஷ சம்ரக்ஷண சங்கம் டிரஸ்டையே (VVSS Trust) சாரும்.

இந்த மாத பிரசுரம் வெளிவர உதவிய அனைத்து உள்ளங்களுக்கும் எங்கள் நன்றி.

# தோரணவாயில்

## ஆசிரியர் முன்னுரை

அன்பு சொந்தங்களுக்கு நெஞ்சார்ந்த நமஸ்காரம்/ஆசிகள்!

**காஞ்சி வரதராஜர் ஆலயம்:** "முக்தி தரும் நகரேழில் முக்கியமாம் கச்சி தனில் அத்திகிரி அருளாளர்க்கு அடைக்கலம் யான் புகுந்தேனே". என்றார் சுவாமி தேசிகன். 108 வைணவ திவ்ய தேசங்களில் திருவேங்கடம், திருவரங்கம் ஆகிய ஸ்தலங்களை போல் முக்யத்வம் வாய்ந்தது. காஞ்சி புரத்தில் உள்ளது. இந்த பகுதிக்கு விஷ்ணு காஞ்சி என்றே பெயர் உண்டு.




ஸ்ரீ பெருந்தேவி தாயார் சமேத ஸ்ரீ பேரருளாளன் – காஞ்சிபுரம்.

புராதனமான இக்கோவிலை, சோழர்களும், அவர்களுக்குப் பின் பல்லவர்களும் விரிவு படுத்திக்க காட்டினார்கள் . ஆதியில் பிரமதேவன் தவம் செய்த இடம். அவர் தவத்திற்கு இரங்கி , மஹாவிஷ்ணுவானவர் யாக குண்டத்தில் இருந்து தோன்றினார். இதனைக் காண மூவரும், முப்பத்து முக்கோடி தேவர்களும் வந்து வாழ்த்தொலி முழங்க மலர் மாரி பொழிந்தனர். தேவலோக யானை ஐராவதம் , பெருமாளிடம் அய்யனே தாங்கள் என்மேல் இருந்து பக்தர்களுக்கு அருள் பாலித்து அருளவேண்டும் என வேண்ட பெருமாளும் வரமளித்தார்.

ஐராவதம் அமர்ந்த இடமே "அத்திகிரி" என்று வழங்கப்படுகிறது. தினமும் ஒரு திருநாள், புறப்பாடு காணும் பெருமாளின் பெயர், தேவராஜன். தேவர்களுக்கு எல்லாம் ராஜன். வரம் கொடுப்பதில் ராஜாவாக விளங்குவதால் வரத ராஜன். இக்கோவிலின் மற்றொரு விசேஷம், அத்தி மரத்தால் செய்யப்பட்ட வரதன், அனந்த சரஸ் என்ற புஷ்கரத்தில், (திருக்குளத்தின்) உள்ளே உள்ள மண்டபத்தில் சயனத்தில் இருக்கிறார். 40 ஆண்டுகளுக்கு ஒருமுறை அவரை வெளியே எடுத்து ஆராதனை புரிவார்கள். ஒரு மண்டல காலம், ஸ்வாமிக்கு அபிஷேகம்,ஆராதனை எல்லாம் வெகு விமர்சையாக நடைபெறும்.

பெருந்தேவி தாயார் எனும் நாச்சியார் தனிக்கோவில் கொண்டு விளங்குகிறார். இது தவிர, சக்கரத்தாழ்வார், யோகா நரசிம்மர், தேசிகர், ராமானுஜர், தன்வந்தரி ஆகியோருக்கு தனித் தனி சந்நிதிகள் உண்டு.

அழகான சிற்ப வேலைப்பாடுகளுடன் 100 கால் மண்டபம் உள்ளது. 9 நிலைகளை உடைய பிரம்மாண்டமான ராஜ கோபுரம். இது தவிர தங்கப் பல்லி , வெள்ளிப் பல்லி உள்ளது. இதனை தொட்டு வணங்கினால், தீராத நோய்கள் தீரும் என்பது ஐதீகம்.



ஸ்வாமிதேசிகன், உடையவர் என்னும் ராமானுஜர், கூரத்தாழ்வார் போன்ற பெரிய மஹான்கள்இங்கே இருந்து பெருமாளுக்கு கைங்கர்யம் செய்துள்ளனர். திருமங்கை ஆழ்வார் நான்கு பாசுரங்களாலும், பூதத்தாழ்வார் இரண்டு பாசுரங்களாலும், பேயாழ்வார் ஒரு பாசுரத்தாலும் மங்களாசாசனம் செய்துள்ளனர்.

வைகாசி மாதம் நடைபெறும் பிரம்மோற்சவத்தில் , கருட சேவையும், திருத்தேர் வைபவமும் உலகப் புகழ் பெற்றவை.அனைவரும் வாழ்நாளில் ஒருமுறையேனும் இங்கே வந்து தரிசனம் செய்து பிறவிப் பயனை அடைய வேண்டும். அதற்க்கு தெய்வத்தின் அருள் துணை இருக்கட்டும் என அனைவரையும், வாழ்த்தி வணங்குகிறேன்.

*****

# ஓர் அறிவிப்பு

நடமாடும் தெய்வமாம் மஹாபெரியவா இம் மனித குலம் உய்வதற்காக எத்தனையோ அறிவுரை, அறவுரைகளை கூறி நாம் வாழ்வாங்கு வாழ வழிகளை சொல்லி இருக்கிறார். அதனைக் கடைப்பிடித்து வாழ்வில் உயர்ந்தவர்கள் எண்ணிலடங்கா. அத்தகையோரில் நானும் ஒருவன்.

எவ்வளவோ வழிமுறைகளை கூறி இருந்தாலும், எல்லோராலும் எல்லாவற்றையும் கடை பிடித்து வாழ்வது சற்று சிரமமான காரியம்தான். ஆனாலும், நம்மால் இயன்ற அளவு அவற்றைக் கடை பிடிக்கலாம். அதற்கான பலனும் உண்டு. அப்படி அவர் காட்டிய வழிமுறைகளைக் கடை பிடித்து, நான் அடைந்த பலன்கள் எத்தனையோ. அவற்றை உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். இது எனது சாதனையைக் கூறுவதற்கு அல்ல. நான் செய்த முறைகளை நீங்களும் கடை பிடிக்க வேண்டும். கடை பிடிக்க கூடியது தான் ஒன்றும் கடினமான காரியம் அல்ல, என்பதால் உங்களிடம் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

அதன் வெளிப்பாடுதான் "மஹாபெரியவா சொன்னதைச் செய்தேன், எனது அனுபவம்" என்ற தலைப்பில் ஒரு புஸ்தகம். இது விலைக்கு அல்ல. நீங்கள் தபால் செலவு (கொரியர்) மட்டுமே தந்தால் போதும். புஸ்தகம் உங்கள் வீடு தேடி வரும். வேண்டுபவர்கள் என்னைத் தொடர்பு கொண்டு பதிவு செய்து கொள்ளவும். நன்றி வணக்கம்.

*நன்றி வணக்கம்!*

என்றென்றும் இறைப்பணியில்,

அன்புடன்,

கி. வேணுகோபால்

*****

# அஸ்வத்தம் (அரச மரம்) / பலாசம் (புரச மரம்)

**அரச மரம்:** "விருட்க்ஷன்களில் நான் அஸ்வத்தமாக இருக்கிறேன்" என்கிறார் ஸ்ரீ கிருஷ்ணர்.

இந்த அரசமரத்தில் மும்மூர்த்திகளும் உறைகிறார்கள். அடிப்பகுதியில் பிரம்ம தேவரும், மத்திய பகுதியில் ஸ்ரீ மஹா விஷ்ணுவும், உச்சியில் பரமேஸ்வரனும் இருக்கிறார்கள். எனவேதான் அரசமரத்தை ப்ரதக்க்ஷணம் செய்யும் போது,

"மூலதோ ப்ரம்ம ரூபாய, மத்யதோ விஷ்ணு ரூபிணே, அக்ரதோ சிவரூபாய, விருக்க்ஷ ராஜாயவே நமஹ" - என்ற ஸ்லோகத்தை சொல்வார்கள்.

பால் உள்ள மரஇனத்தை சார்ந்த இம்மரம் அநேக மருத்துவ குணங்கள் கொண்டது. இதன் நிழலில் அமர்ந்தாலே மனம் அமைதி அடையும். இதன் கீழ் அமர்ந்து படித்தால் பாடத்தை நன்கு கிரகிக்க முடியும். எனவே தான் அக்காலத்தில் அரசமரத்தடியில், வேதம் பயிலும் பாடசாலை மாணவர்கள் வேதம் ஓதுவார்கள்.

குளம், ஆறு, இவற்றின் கரையில் அரச மரமும், அதனடியில் பிள்ளையாரும் இருப்பார். ஸ்னானம் செய்து விட்டு வரும் போது, ஒரு செம்பு நீரை பிள்ளையார் தலையில் ஊற்றுவார்கள், பிள்ளையாரும் ஸ்னானம் செய்வார். அரச மரத்திற்கும் நீர் ஊற்றிய புண்ணியம். நம் முன்னோர்கள் இதனை ஓர் நித்யகடமை ஆகவே செய்தனர்.

ஓர் அரசங் கன்றை நட்டு ஏழு வருஷம் ஆனதும் அதற்கு உபநயனம் செய்வார்கள். பின் அதனருவே ஒரு வேப்பங் கன்றையும் நட்டு, சில வருடம் கழித்து, அவைகளுக்கு திருமணமும் செய்வார்கள். ஆக பெற்ற குழந்தைகளை போன்றே, மரங்களையும் நம் முன்னோர்கள் கவனித்து வந்தனர்.

<u>பூச நக்க்ஷத்திற்கு உரிய மரம்.</u>

**புரச மரம்:** புரசு, பொரசு என்று அழைக்கப்படும் பலாசம் நமது புராணங்களிலும், சம்ரதாயங்களில் இதன் பயன்பாட்டின் முக்கியத்தம் காணப்படுகிறது. இதனை ப்ரம்ப தரு[ப்ரம்மாவின் மரம்] என்பார்கள். ஹோமங்களில் நெய் ஊற்றும் போது, இதன் இலைகளையே கரண்டி போல் செய்து பயன் படுத்துவர். இம்மரத்தின் சிறிய கிளைகளை ஒடித்து, அந்தண ப்ரம்மச்சாரிகள் "தண்டமாக" பயன்படுத்துவர் - அத்தகைய தெய்வீகம் உடையது. இதன் பூ, இலை, மரப்பட்டை மற்றும் வேர் நிறைய மருத்துவ குணம் உடையது.

<u>பூரம் நக்க்ஷத்திற்கு உரிய மரம்.</u>

*****

# அரிய ஆலயமும் அற்புத தகவல்களும்

*காமாட்சி ஏலவார்குழலி சமேத ஏகாம்பரேஸ்வரர்*

பண்டைய புராண நூல்களில் "திருக்கச்சி ஏகம்பம்" என குறிப்பிடப்பட்டுள்ள இக் கோவில் "ஏகாம்பரநாதர் திருக்கோவில்" என அழைக்கப்படுகிறது. நகரேஷு காஞ்சி எனப்படும் காஞ்சி மாநகரில் உள்ளது.



தொண்டை மண்டலத்தில் உள்ள பாடல் பெற்ற ஸ்தலம்.பஞ்ச பூத ஸ்தலங்களில் "பிருத்வி"- எனும் பூமி ஸ்தலம். மாமரம் இதன் ஸ்தல விருக்ஷம்.


ஏலவார் குழலி எனும் திருநாமம் கொண்ட அம்பாள், ஈசனை குறித்து தவமியற்ற இத் திருத்தலம் வந்தார். கம்பா நதிக்கரையில், மணலால் சிவலிங்கம் சமைத்து வழி பட்டு வந்தாள் .தவத்தினை சோதிக்க விரும்பிய ஈசன், நதியில் பெரும் வெள்ளைப் பெருக்கை உண்டாக்கினார். பயந்து போன இறைவி, சிவலிங்கத்தை ஆரத்தழுவினாள் . மகிழ்ந்த இறைவன் காட்சி அளித்தான். அன்னை தழுவியதால் ஏற்பட்ட வளைத் தழும்பினை இன்றும் சிவலிங்கத்தில் காணலாம்.

இரண்டாம் நரசிம்ம பல்லவ மன்னனால் கட்டப்பட்ட இந்த கோவிலுக்கு அவனுக்கு பின்னால் வந்த விஜய நகர அரசர்கள், சோழர்கள் ஆகியோர் திருப்பணி செய்துள்ளனர்.ஆயிரங்கால் மண்டபம் இக்கோவிலின் தனிச் சிறப்பு. பிரம்மாண்டமான கோபுரங்கள், மதிற்சுவர்கள் உள்ளது. மிகப் பெரிய நிலப்பரப்பில் அமைந்துள்ளது.

ஆலயத்தின் உள்ளே மகாவிஷ்ணுவுக்கு தனி சந்நிதி உள்ளது சிறப்பு. இது திவ்ய தேசங்களுள் ஒன்றாகும்.

திருசுற்றுக்களில் பல்வேறு ஸ்வாமிகளுக்கு சந்நிதிகள் உள்ளன.

இங்கும் சித்திரை-வைகாசி மாதங்களில் பிரம்மோற்சவம் மிக சிறப்பாக நடைபெறும். நகரின் மத்தியில் அமைந்துள்ள இந்த ஆலயத்தை சுற்றி எல்லா வசதிகளும் உள்ளன.கோடை, மற்றும் விடுமுறை காலங்களில் கூட்டம் மிக அதிகமாக இருக்கும்.



இந்த காஞ்சி ஏகாம்பரேஸ்வரர் ஆலயத்திலுள்ள பிரகாரத்தில் 10 வருடங்களுக்கு முன்பு ஒரு வில்வ மரம் வெக்க அந்த ஈஸ்வரன் அருள் செய்தான். அந்த மரம் தர்ச்சமயம் பிரமாண்டமாய் வளந்துள்ளதை இங்க காணலாம்.

காஞ்சியிலே காண வேண்டியே பல ஆலயங்களில், ஏகாம்பரேஸ்வரர் ஆலயமும் ஒன்றாகும்.

*****

# காஞ்சி வரதர் கருடசேவை (தொட்டாச்சார்யார் சேவை)

உலகப் பிரசித்தி பெற்ற காஞ்சி வரதராஜ பெருமாள் கருடசேவையில் ஓர் சுவாரஸ்ய சம்பவம்.

ஒருகாலத்தில் சோளிங்கர் கோவிலருகே ஒரு வைஷ்ணவ பெரியவர் வசித்து வந்தார். அவர் பெயர் ஸ்ரீமான் தொட்டாச்சார்யார். அவர் வருடம் தோறும் சோளிங்கரில் இருந்து காஞ்சிபுரம் வந்து கருடசேவையில் கலந்து கொண்டு பெருமாளை தரிசித்துச் செல்வார். வயோதிகம் காரணமாக ஒரு வருடம் அவரால் வர இயலவில்லை. ஆனாலும், வீட்டில் இருந்து கிளம்பி தள்ளாடியபடியே நடந்து வந்தார், முடியவில்லை. அப்படியே சோளிங்கர் கோவிலின் தக்கான் குளக்கரையில் விழுந்து விட்டார். “வரதா வரதா” என அரற்றிக்கொண்டு மயங்கி விழுந்தார்.







அதே சமயம் இங்கே, காஞ்சி கோவிலில் இருந்து கருட வாகனத்தில் வரதர் புறப்பட்டார். தன் பக்தன் நிலை கண்டு உள்ளம் உருகினார். அடுத்த நிமிடமே, கோவில் வாசலில் இருந்த கருட வாகனத்தையும் காணோம், வரதரையும் காணோம் எங்கே? என எல்லோரும் திகைத்து நின்றனர். அதே நேரத்தில், சோளிங்கர் தக்கான் குளக்கரையில், தொட்டாச்சாரியாருக்கு காட்சி அளித்து அவரை தன்னோடு சேர்த்துக் கொண்டார். என்னே! வரதனின் கருணை? இந்த சம்பவத்தை நினைவு கூறும் வகையில், இன்றும் கருட சேவை அன்று, பெருமாள் கருட வாகனத்தில் எழுந்தருளி, கோவில் கோபுரம் வந்ததும், இரண்டு பெரிய குடைகளைக் கொண்டு வாகனத்தை மறைப்பர். அவர் சோளிங்கரில் அப்போது இருப்பதாக ஐதீகம். பக்தனை ஆட்கொண்டதோடு, அவரை நினைவு படுத்தும் வகையில் இன்றும் "தொட்டாச்சாரியார் சேவை" என்பது இங்கு நடக்கிறது.

*****

# அன்னதான சிவன்

- ஸ்ரீமதி பாமா வேணுகோபால்



இவ்வுலகில் அவ்வப்போது எத்தனையோ மஹான்கள் தோன்றி
பலவகைகளில் மக்களுக்கு தொண்டாற்றி வருகிறார்கள்.
அந்த வகையில் இம்மாதம் "**அன்னதான சிவன்**"
என்னும் பெரியவரைப் பற்றி காணலாம்.

அந்தக் காலத்தில், தமிழகத்தில் எந்த இடத்தில் கோவில், கும்பாபிஷேகம், தேரோட்டம் போன்ற வைபவங்களுக்கு ஆயிரக்கணக்கில் மக்கள் கூட்டம் வரும்.அத்தனை பேருக்கும், வயிறார அறுசுவை உணவு. நம்ப முடிகிறதா? ஆம் இதனை நடத்திக் காட்டியவர் ஸ்ரீ சிவன் பின்னாளில் அன்னதான சிவன் என அழைக்கப்பட்டார்.

இத்தனைக்கும் இவர் பெரிய பணக்காரர் அல்ல. ஆனால், இவர் கேட்டதை வழங்க பெரிய தனவான்கள், மிராஸ்தார்கள், நிலா கிழார்கள்  காத்து இருந்தனர். ஓரிடத்தில் அன்னதானம் நடக்கிறது என்றால், வண்டி வண்டியாக உணவுப் பொருட்கள் அனுப்பப்படும். அதனை சமைத்துப் பரிமாற  நூற்றுக்கணக்கானவர்கள் உதவுவார்கள். குழம்பு, ரஸம், கொதிக்கும் போது  வரும் வாசனையை வைத்தே, டேய் இதில் இன்னும் 2 முறம் மல்லி போடு, ஒரு ,முறம் உப்பை போடு என்பாராம் அன்னதானம் முடிந்ததும், இனாமாக கிடைத்த சமையல் பாத்திரங்களை விற்று, தொழிலாளர்களுக்கு கூலி கொடுப்பாராம்.



தஞ்சை தேரோட்டம், கும்பகோணம்  மஹா மகம், அம்பர் மாகாளம் சோமயாக திருவிழா, இப்படி பெரிய பெரிய விழாக்களை சர்வ சாதாரணமாக கையாளும் வல்லமை படைத்தவர். காஞ்சி ஸ்ரீ மடம் கும்பகோணத்தில் இருந்த காலத்தில், தம்மை ஸ்ரீமடத்தோடு இணைத்துக் கொண்டவர். மகா பெரியவாளை, பெரியவா இப்படி உபவாசம் என இருந்து உடம்பை கெடுத்துக் கொள்ளாதீர்கள் என உரிமையோடு பேசுவாராம்.

*****

# எந்தரோ மஹாநுபாவலு

நம் பாரதமாம் புண்ணியபூமியில் கோவில்களுக்கும் குறைவில்லை. குருமார்களுக்கு குறைவில்லை. அவ்வப்போது எண்ணற்ற மஹான்கள், மஹநீயர்கள், சித்த புருஷர்கள் தோன்றி , மக்களுக்கு நல்வழி காட்ட அவதாரம் செய்துள்ளனர். அந்த வகையில் சிலரை, இந்த நூற்றாண்டில் தோன்றியவர்களை. அதுவும் நமது ஸ்ரீமடத்தின் சம்பந்தம் உள்ளவர்களைப் பற்றிக் காணலாம்.

நாம் எதோ ஒரு மரக்கன்றை நடுகிறோம். சில வருடங்களில் அது வளர்ந்து மரமாகிறது. அப்போது நாம் கவனித்தால் , அந்த மரத்தை சுற்றி, நாம் வைக்காத சில தாவரங்களும் வளர்ந்துள்ளதை பார்க்கிறோம். யாரோ ஒருவர் சாப்பிட்டு வீசி எறிந்த ஒரு மாங்கொட்டையோ, ஒரு சப்போட்டா பழ கொட்டயோ. எதோ ஒன்று வளர்ந்து வருவதைக் காணலாம். அப்போது நாம் என்ன செய்ய வேண்டும்? அந்த மரங்களை வேருடன் எடுத்து, வேறு ஒரு இடத்தில் நடவேண்டும். அப்போது நமக்கு இரண்டு மடங்கு பலன்.

அதுபோலத்தான், நமது ஸ்ரீமடத்து குருமார்களை அண்டி, அவர்களுக்கு பணிவிடை செய்து, பலகாலம் தவம் செய்து, பக்குவப்பட்ட நிலை எய்தும் போது, அவர்களுக்கு துறவறம் என்னும் "சன்யாசம்" வழங்கப்படும். அப்படி சன்யாசம் நிறைய பேருக்கு வழங்கப்பட்டு உள்ளது.வந்தவர்களுக்கு எல்லாம் சன்யாசம் வழங்கப்பட மாட்டாது. அவர்களின் தகுதியைப் பார்த்தே(யோக்கிதையம்சம்) வழங்கப்படும். அந்த வகையில் "பூஜ்ய ஸ்ரீ தம்புடு ஸ்வாமிகள்" என்பவரின் திவ்ய சரித்திரத்தைக் காணலாம்.

மஹாபுண்ய க்ஷேத்ரமான தக்ஷிண பத்ரிகாச்ரமம் எனப்படும் "இலந்துறை' எனும் க்ஷேத்ரத்தில் பராசரகோத்ர வம்சத்தினர் பலர் வஸித்து வருகின்றனர். ப்ரஹ்மவித்யாஸம்ப்ரதாய குரு ஸ்தோத்ரத்தில்,

"நாராயணம், பத்மபுவம், வஸிஷ்டம், சக்திம் ச தத்புத்ர பராசரம் ச" "வ்யாஸம் சுகம்" என புத்ரபரம்பரையாகவே அத்வைதவித்யா ஸம்ப்ரதாய குருபரம்பரை வந்துள்ளது. ஸ்ரீசுகாசார்யாளுக்குப் பிறகு சிஷ்ய பரம்பரையாக மாறுகின்றதை கவனிக்கலாம். இவ்வுயர்ந்த பராசர கோத்ரத்தின் ப்ரவரம், "வாஸிஷ்ட", "சாக்த்ய", "பாராசர்ய" த்ரயார்ஷேய ப்ரவான்வித என அபிவாதயே சொல்லும் போது குறிப்பிடுகின்றனர்.

மேற்படி பராசர கோத்ரத்தில் ஆச்வலாயன சூத்ரத்தில் (ரிக்வேதம்) த்ரைலிங்க (தெலுங்கு) ப்ராஹ்மண வகுப்பைச் சேர்ந்தவர்கள் பலர் இந்த இலந்துறையில் பொதுமக்களுக்கு பலவகையில் உபயோகமாகவும், வேதாத்யயன ஸம்பன்னர்களாகவும், வைதிக கர்மானுஷ்டானத்தில் மிகவும் தீவிரமுள்ளவர்களாகவும், ஆசார அனுஷ்டானம் உள்ளவர்களாகவும் இருந்து வந்தனர்.

அப்பேர்ப்பட்ட உயர்ந்த குடும்பத்தில் ஸ்ரீ ஸதாசிவய்யர் மாதுஸ்ரீ வேதாம்பாள் தம்பதியினர், மிகவும் அமைதியான, ஆரோக்யமான, வைதிகமான வாழ்க்கையில் ஈடுபட்டனர். அன்றுடம் வேதோக்த அனுஷ்டானங்களுடன், ஸ்ரீஸுந்தரேச்வரர் அபிராமவல்லியை தரிசிக்காமல் இருக்கமாட்டார்கள்.

அத்துடன் குடும்பயோகக்ஷேமத்திற்காக, இலந்துறையில் உள்ள அரசுப்பள்ளிக் கூடத்தில் ஆசிரிய பணியையும் செவ்வனே செய்து வந்தார் ஸ்ரீ ஸதாசிவய்யர். ஆசிரியபணியை தெய்வீகமான பணியாக ஸேவையாக கருதிய பொற்காலம். ஸ்ரீ ஸதாசிவய்யர் ஸம்பூர்ணமாக ரிக்வேதம் அத்யனனம் செய்தவர். ஆசார அனுஷ்டான சீலர். ப்ரஹ்மயக்ஞம், நித்ய பூஜைகள் செய்து, பள்ளிக்கு சென்று ஆசிரியபணியை செவ்வனே செய்து நூற்றுக்கணக்கான மாணவச் செல்வங்களை உருவாக்கியவர்.

ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடத்தின் 65ம் பீடாதிபதியாக இருந்த "இளையாத்தங்குடி பெரியவா" என அன்புடன் அழைக்கப்பட்ட ஜகத்குரு ஸ்ரீஸுதர்ஸன மஹாதேவேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகள் (1850-1891) கும்பகோணத்தில் முகாமிட்டு இருந்த காலத்தில், அவருக்கு குருஸேவை செய்துள்ளார்.

மாதுஸ்ரீ வேதாம்பாளும், கணவரின் குறிப்பறிந்து பதிஸேவை செய்து, குடும்பத்தை மிக எளிமையாக வழிநடத்தியவர். மிகப் பெரிய ஸம்ஸாரியான குடும்பம்

இவ்வுத்தம தம்பதிகளுக்கு ஐந்து ஆண் குழந்தைகளும், ஒரு பெண் குழந்தையும் பிறந்து வளர்ந்தன.

1. சிரஞ்சீவி எஸ். ஸுப்ரமண்யன் (இவரும் ஸ்ரீ காஞ்சி மடத்தில் ஸ்ரீநாஸிக் ஸ்வாமிகளிடம், ஸ்ரீ ஆசார்யாள் ஆக்ஞைபடி துரீயாச்ரமம் பெற்று அண்ணன் ஸ்வாமிகள் என ப்ரஸித்தமான யதீச்வரர்களாக திகழ்ந்தார். ஆசார சீலர்) ஸ்ரீஸித்தானந்த தீர்த்தர் என ஆச்ரமநாமம். அதிஷ்டான போட்டோ இத்துடன் ப்ரசுரிக்கப்பட்டுள்ளது.
2. ஸகோதரி ஸௌ- ராஜலக்ஷ்மி.
3. சிரஞ்சீவி: ஸ்ரீவேங்கட கிருஷ்ணன்
4. சிரஞ்சீவி: ஸ்ரீவேங்கட நாராயணன்
5. சிரஞ்சீவி. ஸ்ரீவேங்கட குரு

இந்த ஐவருக்குப் பிறகு அவதரித்தவர். நம் பூஜ்யஸ்ரீ தம்புடு ஸ்வாமிகள், அண்ணா மூத்தவர் ஸ்ரீஎஸ்.ஸுப்ரமண்யமும் துரீயாச்ரமம் பெற்றதால் 'அண்ணன் ஸ்வாமிகள்" எனவும், இவரை தம்புடு ஸ்வாமிகள் எனவும் ஸ்ரீமடத்தில் அழைக்கலாயினர். அதனால் பூஜ்யஸ்ரீ தம்புடு ஸ்வாமிகள் என பெயரே ப்ரஸித்தியாகிவிட்டது. அண்ணா, தம்பி இருவருமே ஒரே தினத்தில் ஒரே குருவிடம் துரீயாச்ரம தீக்ஷை பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ப்ரபவ மார்கழி மீ புனர்வஸு நக்ஷத்ரத்தில் (7.1.1928) ஸ்ரீதம்புடு ஸ்வாமிகள் இப்புவியில் அவதரித்தார். அவருக்கு தந்தை தாய் இட்ட பெயர் ஸ்ரீ வேங்கட கோபாலகிருஷ்ணன் என்பதே

திருமலை திருப்பதி ஸ்ரீ வேங்கடாஜலபதி ஸ்வாமியை இஷ்ட குலதெய்வமாகக் கொண்டதால், குடும்பத்தில் அனைவருக்கும் "வேங்கட" என சேர்த்தே பெயரிட்டனர். "!

இலந்துறை அருகில் திருவிடைமருதூர் பள்ளியிலேயே 4th பார்ம் வரை பள்ளிப்படிப்பை தொடர்ந்தார். அக்காலத்தில் I[st] பார்ம், II[nd] பார்ம் (FORM) என்றே குறிப்பிடுவர். தற்போது I[st] std, II[nd] std என்கின்றோம். இவரது தந்தை மிகச்சிறப்பாக நன்கு படித்த குழந்தை வேங்கட கோபாலகிருஷ்ணனை, அவரது புத்தி தீக்ஷிண்யத்தை நன்கு புரிந்து கொண்டு, ஸ்வதர்ம

படிப்பான ரிக்வேதம் பயில கும்பகோணம் ராஜா வேதகாவ்ய பாடசாலையில் சேர்த்தார். மாயவரம் ப்ரம்மஸ்ரீ கிருஷ்ணசாஸ்திரிகள் இக்குடும்பத்தினருக்கு அவ்வப்போது வழிகாட்டி வந்தார். அவரின் Photo இணைக்கப்பட்டுள்ளது. கும்பகோணம் ராஜா வேத காவ்ய பாடசாலை ஸ்ரீ காஞ்சி மஹாஸ்வாமிகளின் மூதாதையர்களான நாகம்பா ஸமேத அத்வைத வித்யாசார்ய மஹாராஜா ஸாஹேப் பகவான் ஸ்ரீகோவிந்த தீக்ஷிதரால், தான் செய்தயாக பூமியிலேயே காவேரி தீரத்தில் கி.பி.1542ல் ஸ்தாபிக்கப்பட்டது. இப்புண்ய தம்பதிகளின் போட்டோவும் சேர்க்கப்பட்டுள்ளது. கும்பகோணம் அருகில் பட்டீச்வரத்தில் ஸ்ரீதேனுபுரீச்வரர் கோவிலில், ஸ்ரீஞானாம்பிகை ஸன்னிதியில், இன்றும் இந்த தம்பதிகளை தரிசிக்கலாம்.

அப்புனித ராஜா வேத காவ்ய ரிக்வேதத்தில் பாடசாலையில் மிகவும் ப்ரஸித்தமாக விளங்கியவர் Sri. M.R. முத்கல ராமாச்சார்யார். 8.4.1924 முதல் 31.1.1965 வரை ரிக்வேத அத்யாபகராகவும், தலைமை ஆசிரியராகவும் பணிபுரிந்தவர். இவரைப்பற்றிய விவரங்கள் இத்துடன் சேர்த்துள்ளோம்.

1943ம் வருஷம் முதல் 1950ம் வரை, ராஜாவேத காவ்ய பாடசாலையில், மஹான் முத்கல ப்ரம்மஸ்ரீ ராமாச்சார்யாரிடம், ஸம்பூர்ணமாக ரிக்வேதம் அத்யயனம் செய்துள்ளார். பாடசாலை அட்டன்டென்ஸ்ஸில் எஸ். வி. சர்மா என குறிப்பிடப்பட்டு இருக்கும். மிக கடுமையான ப்ரம்மசாரி வ்ரதத்தை மேற்கொண்டவர். ஆசாரத்தை மிக கடுமையாகவே அனுஷ்டித்தார். மடிதவறு ஏற்பட்டால் உடனே உபவாஸம், ஸ்னானம் முதலியவைகளை மேற்கொண்டார். ஸ்ரீவித்யா உபாஸகராக விளங்கி வருகின்றார். பூர்வாச்ரம போட்டோவும் இத்துடன் ப்ரகரிக்கப்பட்டுள்ளது.

கும்பகோணத்தில் "சேங்காலிபுரம் வாஜபேயயாஜி ஸ்ரீகுப்பு தீக்ஷிதர் எனப்படும் ப்ரம்மஸ்ரீராமநாதவாஜபேயர் க்ருஹம் கல்யாணராமன் தெருவில் உள்ளது. அக்குடும்பத்துடன் மிக்க நெருங்கிய தொடர்பு கொண்டவர். மஹாக்னிசித்- ச்ரௌதஞர்

ப்ரம்மஸ்ரீ சேங்காலிபுரம் ஸ்ரீஸுந்தரராம தீக்ஷிதரின் தகப்பனார்தான் ஸ்ரீகுப்பு தீக்ஷிதர். அவர்கள் வெளியூர் செல்ல வேண்டி இருந்தால் வீட்டிற்கு துணியாக இருக்க, அவர் ஸ்ரீ S.V. சர்மாவிற்கு இலந்துறைக்கு கார்டு போடுவார். உடனே 5,6 பித்தளை சொம்புகளுடன் கிளம்பி வந்து விடுவாராம். அனைத்து பித்தளை சொம்புகளையும் அன்றாடம் சுத்தமாக தேய்த்து வைத்திருந்தால் "தங்க சொம்போ" எனப்படும் படியாக பளிச்சென்று இருக்குமாம். காவேரியில் அன்றாடம் ஸ்னானம், அனுஷ்டானம், பரான்னநியமம் முதலிய கடுமையான ஆசாரங்களை மேற்கொண்டார். இயற்கையிலேயே விரக்தியாக வைராக்ய ஸம்பன்னராக இருந்தார்.

தன்தந்தை மற்றும் குடும்பத்தினரைப் போன்றே ஸ்ரீகாஞ்சி ஆசார்யாளிடம் மிக்க குருபக்தி கொண்டவர்.

தன்மூத்த சகோதரர் சிவி. ஸுப்ரமண்யனுடன் ஸ்ரீகாஞ்சி ஆசார்யாளை தரிசித்து, துரீயாச்ரமம் வேண்டி பிரார்த்தித்தார்.

இவர்களின் ஆசாரம், அனுஷ்டானம், வைராக்யம் இவைகள் நன்கு தெரிந்து கொண்டு இருந்த ஸ்ரீகாஞ்சி ஆசார்யாள், அப்போது ஸ்ரீமடத்தில் இருந்த பூஜ்ய ஸ்ரீநாஸிக் ஸ்வாமிகளிடம், இவ்விருவருக்கும் ப்ரணவஜப, மஹாவாக்யோபதேச பூர்வக துரியாச்ரமம் கொடுக்க சொன்னார்.

யதாசாஸ்த்ரம் இவ்விருவருக்கும் 12.5.1987ல், துரீயாச்ரமம் உபதேசிக்கப்பட்டது. அண்ணாவிற்கு ஸ்ரீஸித்தானந்த தீர்த்தர் எனவும், தம்பிக்கு, ஸ்ரீகுவலயானந்த தீர்த்த ஸ்வாமிகள் என தீக்ஷா நாமம் அளிக்கப்பட்டது. தம்பியாக இருந்ததால் ஸ்ரீதம்புடு ஸ்வாமிகள் என ப்ரஸித்தமாக அழைக்கப்படலானார். துரீயாச்ரமம் பெற்றாலும், அன்றாடம் ஸ்ரீவித்யோபாஸனை பூஜா க்ரமங்களை அனுஷ்டித்து வருகின்றார். யாரும் இவரிடம் எளிதில் நெருங்கிவிட முடியாது. பெரும்பாலும் மௌன நிலையிலேயே இருப்பார். ஜபங்கள், லக்ஷகணத்தில் செய்து வருகின்றார்.

பிறரை எதற்கும் எதிர்பாராமல் இன்றும் தன்னுடைய 87ம் வயதில், தன் காரியங்களை தானே கவனித்து வருகின்றார்.

ஆச்ரமம் ஸ்வீகாரம் பெற்றதிலிருந்து ஸ்ரீஆசார்யாளை பிரிந்ததே இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஆச்ரமம் பெற்றதில் இருந்து அனைத்து வ்யாஸ பூஜைகளும், சாதுர்மாஸ்ய விரதங்களும் காஞ்சியிலே ஸ்ரீமடத்திலே தான் அனுஷ்டித்து வருகின்றார்.

ஸ்ரீகாஞ்சி ஆசார்யாள் நேரடி மேற்பார்வையில் இயங்கிவரும் ABCD Hospital, இயக்குனர், ஸ்ரீசிவசாம்பு அய்யர் குடும்பத்தினர் இன்றும், ஸ்ரீஆசார்யாள் ஆக்ஞைபடி ஸ்ரீதம்புடு ஸ்வாமிகளுக்கு அன்றாடம் பிக்ஷை அளித்து வருகின்றனர். ஸ்ரீஸ்வாமிகளிடம் மிகுந்த அன்பும், குருபக்தியும் கொண்டவர்கள் ஸ்ரீ சிவசாம்பு அய்யர் குடும்பத்தினர். 2009ம் வருஷம் ஸ்ரீ தம்புடு ஸ்வாமிகளுக்கு சதாபிஷேக உத்ஸவம் ஸ்ரீ காஞ்சி ஆசார்யாள் அனுக்ரஹத்துடன், அமைதியுடனும், ஸ்ரீகாமாக்ஷி அம்மன் கோவிலில் மிக விமர்சையாக செய்யப்பட்டது. பலருக்கு ருத்ராக்ஷமாலை பரஸாதமாக அளிக்கப்பட்டது, ஸ்வாமிகளிடம் மிகநெருங்கிய பழகிவரும் அன்பர்கள், ஸ்ரீமடம் கைங்கர்யபரர்கள் என பலர், இந்த ஸதாபிஷேக உத்ஸவத்தை ஸ்ரீ ஆசார்யாள் ஆக்ஞைபடி, நடத்தி புண்யம் பெற்றனர்.

முக்யமாக சென்னை சங்கர நேத்ராலயாவில் பணிபுரிந்தவர்களான ஸ்ரீ ஜி. சிவராமன், ஸ்ரீ அனந்தராமன், மற்றும் நண்பர்கள் பலருடன், இதில் முக்யபங்கேற்று தன் ஸ்தாபிஷேக உத்ஸவத்தை மிக விமர்சையாக செய்தனர் என ஸ்ரீஸ்வாமிகளே பெருமையாக கூறுகின்றார்.

ஸ்ரீஆசார்யாள் க்ருபையால்தான் நிம்மதியாக தபஸ் செய்ய முடி கின்றது என நெஞ்சு தழுதழுக்க, கண்களில் நீர்மல்க, தன் ஆசார்ய குரு பக்தியை காண்பிக்கின்றார்.

சிஷ்ய ஸன்யாஸிகளிடமும், புத்ர வாத்ஸ்யத்துடன் கருணை பொழிகின்றார்.

அவ்வப்போது எங்களை அழைத்து ஞாபகப்படுத்திக் கொண்டு தன் வாழ்க்கையில் நடைபெற்ற நிகழ்ச்சிகளை தெளிவாக கூறி வருகின்றார்.

1919ம் ஆண்டு இலந்துறைக்கு ஸ்ரீமஹாபெரியவா, விஜயம் செய்த ஸமயம், இவர்கள் க்ருஹத்தில் 3,4 நாட்கள் முகாமிட்டு ஸ்ரீசந்த்ரமௌளீச்வரர் பூஜைகள் செய்ததாகவும், ஸ்ரீபெரியவா, அடுத்த முகாமிற்கு கிளம்பும் ஸமயம் இவரின் தந்தை இந்த கருணையை தங்கள் குடும்பமும், வருங்கால குடும்ப ஞாபகப்படுத்திக் கொள்ளவும் அனுக்ரஹம் புரிய வேண்டும்

என கேட்க, ஸ்ரீஆசார்யாளும் பின்வருமாறு ஆக்ஞை இட்டார்களாம். "ஒவ்வொரு வருஷமும் ஸ்ரீசங்கரஜயந்தி உத்ஸவத்தை நடத்த வேண்டும் என்றும், இலந்துறை ஸ்ரீஅபிராமிவல்லி ஸமேத ஸ்ரீஸுந்தரேச்வரர் கோவிலில் உள்ள ஸ்ரீதக்ஷிணாமூர்த்திக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள், அன்னதானம், பஜனை முதலியன செய்ய வேண்டுமென்றும்' சொன்னார்களாம். அன்று முதல் இன்று வரை சுமார் 96 வருஷங்களாக இந்த ஸ்ரீசங்கரஜயந்தி மண்டகப்படி தர்மம் நடைபெற்று வருகின்றது. அதே போல் புரட்டாசி மஹா நவராத்ரி உத்ஸவத்தில் வரும் ஞாயிற்றுக் கிழமை அன்று ஸ்ரீ அம்பாளுக்கு விசேஷ மண்டகப்படி பலதலைமுறைகளாக நடைபெற்று வருகின்றது.

ஸன்யாசிக்கு பணம் தேவையில்லை. இருப்பினும், பக்தர்கள் தாங்களே அளிப்பதால் அதை பெற்றுக் கொண்டு இந்த புனித மண்டகப்படி கார்யத்திற்கு உபயோகப்படுத்தி வருவதாகவும், பலர் வேண்டுகோளுக்கு இணங்க தான் ஸம்மதித்ததாகவும், ஸ்ரீஸ்வாமிகள் எங்களிடம் தெரிவித்தார். ஸ்ரீமடம் மூலம் இத்தொகையை அளித்து வருவதாகவும் சொல்கின்றார்.

சிறுவயதிலிருந்தே ஸ்ரீஹயக்ரீவ உபாஸகராக இருக்கும் ஸ்வாமிகள், அன்றாடம் ஹயக்ரீவ உபநிஷத் பாராயணம் செய்வதோடு, ஸ்ரீமத்பாகவத ஸ்ரீபகவத்கீதை, அஷ்டோத்தரசத உபநிஷத் (108 உபநிஷத்துக்கள்) முதலியவைகளை தவறாமல் பாராயணம் செய்து வருகின்றார்.

அன்றாடம் ஸ்ரீவித்யோபாஸனையுடன் லலிதாஸஹஸ்ரநாமம், திரிசதி போன்றவைகளால் ஸ்ரீ அம்பாளை ஆராதித்து, சந்த்ரதரிசனமும் தவறாமல் செய்து வருகின்றார். ப்ரதிமாதம் ஏகாதசி, சரவணவ்ரதம் முதலியனவகளை நிர்ஜல உபவாஸமாக பல வருஷங்களாக அனுஷ்டித்து வருகின்றார். முக்யமாக ச்ராவண (ஆவணி மாதம்) திருவோண (ச்ரவண) விரதம் அதிக நன்மை அளிக்கும் என்பதில் தருடமான நம்பிக்கையுடன், இன்றும் அந்த ச்ரவண விரதத்தை அனுஷ்டிக்கின்றார்.

ஸ்ரீமஹாபெரியவா ஸித்தியானதிலிருந்து அன்னபிக்ஷையை ஏற்க மறுத்து, ஒரே தடவையாக போண்டா, பக்கோடா போன்றவைகள் மட்டுமே பிக்ஷையாக ஏற்று வந்தநிலையில், தற்போது உடல்நிலையை கருதி டாக்டர்களின், அறிவுரையை ஏற்று ஒரே தடவை மட்டும் அன்னபிக்ஷையை ஏற்க ஸம்மதித்துள்ளார். ஸ்ரீகாஞ்சி ஆசார்யாள் உபநிஷத் ப்ரஹ்மேந்திராள் மடத்திற்கும், ஸ்ரீராமப்ரஹ்ம மடத்திற்கும், இவரை மடாதிபதியாக நியமித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

*இது நமது காமகோடி ஸ்ரீமடம் வெளியிட்ட ஸ்ரீ தம்புடு ஸ்வாமிகள் சரித்திரம் என்னும் புஸ்தகத்தில் இருந்து எடுக்கப்பட்டது.*

*****

# புண்ணியத்தைப் புரிந்து கொள்

ஓர் ஊரில் அண்ணன் தம்பி இருவர் வாழ்ந்து வந்தனர். அண்ணனின் மகன் பெயர் நடராஜன், தம்பியின் மகன் பெயர் சங்கரன். இருவரும் படித்து பட்டபடிப்பை முடித்து வேலை செய்யும் பருவத்திற்கு வந்தார்கள். அண்ணன் தம்பி இருவரும் அவர்கள் ஊரிலுள்ள வெவ்வேறு ஆலைகளில் பணியாற்றினார்கள். அண்ணன் திருவரம்பூர் சிவன்; மீது மிகவும் பற்று கொண்டவர். சிவனுக்கு உண்டான கைங்கரியங்களை எல்லாம் செய்து வந்தார். தம்பியும் கோவிலின் மீது பற்றுக் கொண்டவராகவே இருந்தார். இரண்டு குடும்பங்களும் நடுத்தரகுடும்பமாக இருந்ததால் தனது மகன்களை மேற்படிப்பிற்கு அனுப்ப வசதியில்லாமல் அவர்களுக்கு ஏதேனும் வேலைக்கு ஏற்பாடு செய்தால் குடும்பம் சற்று தலைதூக்கும் என்று இருவருமே எண்ணினார்கள்.

அந்த சமயத்தில் தம்பி வேலை செய்யும் ஆலையில் பணியிடம் ஒன்று காலியாக இருப்பதாகவும் அதற்கு இந்த இரண்டு பிள்ளைகளும் போதுமான தகுதியுடன் இருப்பதாகவும் அறிய வந்தது. இருவரும் தங்களுடைய பிள்ளைகளின் விபரங்களை எல்லாம் எழுதி விண்ணப்பங்களைத் தனித்தனியாக கவரில்வைத்து தயார் செய்தார்கள். தம்பி வேலை செய்யும் ஆலை அதலால் அண்ணன், தம்பியிடம் இரண்டு பேர்களுடைய விண்ணப்பங்களையும் கொடுத்து ஆலை உரிமையாளரிடம் சமர்ப்பிக்குமாறு கூறினார். தம்பியும் விண்ணப்பங்களை வாங்கி கொண்டு ஆலைக்குச் சென்றார். ஆலை கதவை நெருங்கியவுடன் அவர் மனத்தில் ஒன்று உதித்தது. இருப்பதோ ஒரு பதவி அதற்கு நாம் இரண்டு விண்ணப்பங்களைக் கொடுத்து நமக்குள் நாமே ஏன் போட்டியை உண்டாக்க வேண்டும் என்று எண்ணி அண்ணன் மகன் நடராஜனின் விண்ணப்பத்தை தன் சட்டைப் பையில் வைத்துக் கொண்டு தனது மகன் சங்கரனின் விண்ணப்பததை மட்டும் ஆலை உரிமையாளாரிடம் கொடுத்தார். வீட்டிற்கு வந்து இருவருடைய விண்ணப்பங்களையும் கொடுத்து விட்டதாகவும் யாருக்கு கொடுத்து வைத்து இருக்கிறதோ அவருக்கு வேலை கிடைக்கட்டும் என்றும் கூறினார்.

ஒரு வாரம் சென்றது எண்ணியபடியே ஆலையிலிருந்து தம்பி மகன் சங்கரனுக்கு வேலைக்கான அழைப்பு வந்தது, அவனுக்கு வேலையும் கிடைத்தது. சாதாரண தொழிலாளியாக அவன் வேலைக்கு சென்றான். தம்பியோ அண்ணனிடம் சங்கரனுக்கு அதிர்ட்;டத்தால் வேலை கிடைத்தது என்று கூறினார். தான் அண்ணன் மகனின் விண்ணப்பத்தை கொடுக்காததை முழுமையாக மறைத்துவிட்டார். மாதங்கள் ஓடின. சங்கரனுக்கு ஆலையில் வேலை சரியாக இருந்தது. பெரியவரின் மகன் நடராஜனோ ஆங்காங்கே சிறுசிறு வேலைகளுக்கு சென்று வந்தான்.

அப்போது அண்ணன் பணி செய்யும் ஆலையின் உரிமையாளர் அவருக்கு தெரிந்த சென்னையிலுள்ள ஒரு பெரிய தொழில் நிறுவனத்தில் ஆட்கள் தேவை எனவும் அதற்கு அண்ணனின் மகனை விண்ணப்பிக்குமாறு கூறினார். அண்ணனோ தம்பியிடம் சென்று இதை கூறி தம்பி மகனுடைய விண்ணப்பத்தைக் கொடுக்குமாறும் தான் தன் ஆலை உரிமையாளரிடம் இரண்டு பேருடைய விண்ணப்பங்களையும் கொடுக்க எண்ணிருப்பதாகவும் தெரிவித்தார். அதற்கு தம்பியோ, "அவனுக்கு ஏற்கனவே அதிர்ட்;டம் வந்து வேலையில் இருப்பதாகவும் உங்கள் மகனுக்கு மட்டும் நீங்கள் கொடுங்கள்" என்று கூறினார்.

அண்ணனும் திருவரம்பூர் சிவன் மீது பாரத்தைப் போட்டு விண்ணப்பத்தைக் கொடுத்தார். ஒரு வாரத்தில் அண்ணன் மகன் நடராஜனுக்கு அந்த பெரிய தொழில் நிறுவனத்திலிருந்து மேலாளர் வேலைக்கு அழைப்பு வந்தது. அவனும் சென்னைக்கு சென்று தேர்வு பெற்று பணியில் சேர்ந்தான். சில மாதங்கள் ஓடின. நடராஜனின் வேலையும், அவனுடைய சுறுசுறுப்பையும் கண்டு அவர்கள் நிறுவனம் வெளிநாட்டிலிலுள்ள அவர்களுடைய கிளைக்கு

அவனை தலைமை பொறுப்பாளாராக ஆக்கி அனுப்பி வைத்தார்கள். ஒராண்டிற்குள் தம்பி மகன் சங்கரனுடைய வளர்ச்சியைப் பார்க்கும் பொழுது அண்ணன் மகன் நடராஜனின் வளர்ச்ச்p எங்கேயோ போய் இருந்தது.

நடராஜனின் வளர்ச்ச்pயைக் கண்டு தம்பி வாயடைத்து நின்றார். ஒரு நாள் அண்ணன், தம்பி இருவரும் திருவரம்பூர் செல்லும் பொழுது அண்ணனிடம் தம்பி தான் முன்பு செய்த தவற்றைக் கூறி வருந்தினார். அண்ணணோ சற்றும் கோபப்படாமல் தம்பியிடம் "நீ அன்று அப்படி செய்ததால் தான் இன்று நடராஜன்; இந்த நிலைக்கு வந்திருக்கிறான். ஆகவே உனக்கு தான் அவன் நன்றி சொல்ல வேண்டும் ஆனாலும் நீ உனது மகன் சங்கரனுடைய விண்ணப்பத்தை என்னிடம் கொடுத்திருந்தால் ஒரு பதவி மட்டும் இருக்கிறது என்று அறிந்தால் கண்டிப்பாக நான் உனது மகன் சங்கரனின் விண்ணப்பத்தைத்தான் கொடுத்திருப்பேன். நடந்தது எல்லாம் சிவனின் செயல். அதிர்ட்;டம் என்பது அடுத்தே வருவது அல்ல காலம் தாமதித்தாலும் கொடுக்க வருவதே அதிர்ட்;டம்" என்றார். அண்ணனின் வார்த்;தையைக் கேட்ட தம்பி கண்ணீர் மல்க நின்றார். அண்ணன் எந்த சலனமும் இல்லாமல் கோவிலுக்குள் சென்று வழக்கம் போல் சிவனை தரிசிக்க ஆரம்பித்தார்.

அன்பர்களே! இந்த காலத்தில் நம்மில் பலர் தான் தன் குடும்பம் அதனுடைய உயர்வு என்பதை மட்டும் சிந்திக்கிறார்கள். பற்றாக் குறைக்கு குடும்பத்தினர் மற்றவர்கள் உயர்ந்த நிலையை அடைந்தால் அதைக் கண்டு மகிழாமல் பொறாமையேப்படுகிறார்கள். தனது குடும்பத்தில் யாரேனும் துன்பப்பட்டால் அவர்களை கை தூக்கி உயர்த்தி விட வேண்டும் என்ற எண்ணம் முற்றிலும் குறைந்து விட்டது. மற்றவர்களுக்கு ஒரு மடங்கு நாம் செய்யும் நன்மை பல மடங்காக நமக்கும் நம் சந்ததிகளுக்கும் வரும் என்ற தத்துவத்தை பெரும்பாலோர் மறந்து விட்டார்கள். இறைக்க இறைக்க கிணற்று நீர் சுரப்பது போல அடுத்தவர்களுக்குக் கொடுக்க கொடுக்க உனக்கு புண்ணியம் சேரும் புண்ணியம் சேர்ந்தால் வாழ்க்கை உயரும் என்பதை மனதில் கொள்ள வேண்டும் இதை தான் நமது முன்னோர்கள் " ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளைகள் தானே வளரும்" என்றனர்.

*வாழ்க வையகம்*

அன்புடன்

மனோகர்

குவைத்

*****

# பலன் தரும் பதிகங்கள்

திருச்சிற்றம்பலம்

அனைவருக்கும் நமஸ்காரம்,

ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய சொந்த பந்தங்களுடன் வாழ்வதிலேயே மிகவும் மகிழ்ச்சி அடைகிறார்கள். பண்டைக் காலத்தில் உறவுகள் எல்லாம் ஒரே இடத்தில் வசித்து வந்தனர். காலப்போக்கில் அவர்கள் பிரிந்து வெவ்வேறு இடங்களுக்கு சென்றனர். அப்போது உறவுகளை சந்திக்க கால்நடையாகவும், மாட்டு வண்டியிலும் சென்றனர். பிறகு மிதிவண்டி, பேரூந்து, புகைவண்டி மூலமாக சென்றனர். ஆனால் ஒவ்வொரு விபரத்தையும் உடனுக்குடன் தெரிவிக்க பண்டைக் காலத்தில் ஒலைகள். கடிதங்கள் மூலம் தெரிவித்தனர். இதற்கு மூலம் எதுவென்றால் "கல்வி", எழுதபடிக்கத் தெரிந்த காரணத்தால்தான் நேரில் செல்ல இயலாதவர்கள் கடிதம் வாயிலாக செய்திகளைத் தெரிவித்தனர். எனவே கல்வி என்பது நமக்கு கண் போன்றது. கண் நமக்கு ஒளியைத் தருவது போல நமது வாழ்கைக்கு வெளிச்சத்தை தருவது கல்வியே.

அக்காலத்தில பிச்சை எடுத்தாவது கல்வி கற்க வேண்டும் என்றனா.; நமது முன்னோர்கள் படிக்காதவன் மாடு மேய்க்கத்தான் போவான் என்றனர். படிக்கும் ஒவ்வொருவருமே கல்வியில் சிறந்து விளங்குவதில்லை. எனவே கல்வியில் சிறந்து விளங்க பலன் தரும் பதிகங்களிலுள்ள கல்வியில் சிறந்து விளங்க உதவும் பதிகத்தை பக்தியுடனும். நம்பிக்கையுடனும் பாராயணம் செய்து பலனைப் பெறலாம். இப்பதிகத்தைப் பற்றி இறைவனின் பாதக் கமலங்களை வேண்டி இத்தொடரில் எழுதுகின்றேன்.



இடம்: ஸ்ரீ அக்னீஸ்வரர் ஆலயம், களக்காட்டூர், காஞ்சிபுரம்

## *பதிகம் - 5*

## *கல்வியில் சிறந்து விளங்க வேண்டும் பதிகம்*

அன்னை. தந்தை தங்கள் பிள்ளை என்ற மூன்றெழுத்து உடையவரை பள்ளி என்ற மூன்றெழுத்தில் சேர்த்து ஆசான் என்ற மூன்றெழுத்தின் உதவியோடு கல்வி என்ற மூன்றெழுத்தை பணிவு, பக்தி.அறிவு என்ற மூன்றெழுத்தால் கற்று பதவி,புகழ் என்ற மூன்றெழுத்துகளை அடைந்தது அன்னை, தந்தைக்கு பெருமையே.

**பதிக வரலாறு**

கும்பகோணத்திலிருந்து திருவையாறு செல்லும் சாலையில் உள்ளது “இன்னம்பூh” என்ற பிரசித்திப் பெற்ற சிவத்தலம்;. இத்தலத்து இறைவர் அகத்தியருக்கு இலக்கண உபதேசம் செய்து அருளினார். அதனால் இத்தலத்து இறைவன் “எழுத்தறிநாதர்” என்று போற்றப்படுகிறார். திருஞானசம்பந்தர் இத்தலத்து இறைவனை வழிப்பட்டு பாடப்பெற்ற இப்பதிகத்தை பக்தியுடனும், நம்பிக்கையுடனும் பாராயணம் செய்தால் இறைவன் அருளால் கல்வியில் சிறந்து விளங்கலாம் என்பது உண்மையாகும்.

**இன்னம்பூர்** **பண்: சாதாரி**

எண்திசைக் கும்புகழ் இன்னம்பர் மேவிய
வண்டிசைக் கும்கடை யிரே
வண்டிசைக் கும்;சடை யீர்உமை வாழ்த்துவார்
தொண்டிசைக் கும்தொழி லோரே

யாழ்நரம் பின்இசை இன்னம்பர் மேவிய
தாழ்தரு சடைமுடி இரே
தாழ்தரு சடைமுடி யீர்உமைச் சார்பவர்
ஆழ்துயர் அருவினை இலரே

இளமதி நுதலியோடு இன்னம்பர் மேவிய
வளமதி வளர்சடை யீரே
வளமதி வளர்சடை யீர்உமை வாழ்த்துவார்
உளமதி மிகஉடை யோரே

இடிகுரல் இசைமுரல் இன்னம்பர் மேவிய
கடிகமழ் சடைமுடி யீரே
கடிகமழ் சடைமுடி யீhஉம கழல்தொழும்
அடியவர் அருவினை இலரே

இமையவர் தொழுதெழும் இன்னம்;பர் மேவிய
உமையொரு கூறுடை யீரே
உமையொரு கூறுடை யீர்உமை உள்குவார்
அமைகிலர் ஆகிலர் அன்பே

எண்ணரும் புகழுடை இன்னம்பர் மேவிய
தண்ணரும் சடைமுடி யீரே

தண்ணரும் சடைமுடி யீர்உமைச் சார்பவர்
விண்ணவர் அடைவுடை யோரே

எழில்திக ழும்பொழில் இன்னம்பர் மேவிய
நிழல்திகழ் மேனியி னீரே
நிழல்திகழ் மேனியி னீர்உமை நினைபவர்
குழறிய கொடுவினை இலரே

ஏத்தரும் புகழணி அன்னம்பர் மேவிய
தூர்த்தனைத் தொலைவுசெய் தீரே
தூர்த்தனைத் தொலைவுசெய் தீர்உமைத் தொழுபவர்
கூர்த்தநற் குணமுடை யோரே

இயல்உளோர் தொழுதெழும் இன்னம்பர் மேவிய
அயனும் மால் அறிவரி யீரே
அயனும் மால்அறி வரியீர்உமது அடிதொழும்
இயல்உளார் மறுபிறப்பு இலரே

ஏரமர் பொழிலணி இன்னம்பர் மேவிய
தேரமண் சிதையுசெய் தீரே
தேரமண் சிதைவுசெய் தீர்உமைச் சேர்பவர்
ஆர்துயர் அருவினை யிலரே.

ஏடமர் பொழிலணி இன்னம்பர் ஈசனை
நாடமர் ஞானசம் பந்தன்
நாடமர் ஞானசம் பந்தன் நற்றமிழ்
பாடவல் லார்பழி இலரே.

**வாழ்க்கை அனுபவம்**

இப்பதிகத்தை நம்பிக்கையுடன் மனமுருகி  பாராயணம் செய்தவர்கள் பலன் பெற்றுள்ளதற்கு பல சான்றுகள் உள்ளன. அவற்றில் ஒன்றை எழுதுகின்றேன்.

ஓர் அழகான ஊரில் இரு சகோதாரர்கள் ஒன்றாக தொழில் செய்து வாழ்ந்து வந்தார்;கள். இருவருக்கும் திருமணம் நடந்தது. மூத்தவருக்கு கணேசன் என்ற மகனும் இளையவருக்கு சண்முகம் என்ற மகனும் இருந்தனர். இருவரும் ஒரே வகுப்பில் படித்தனர். கணேசன் நன்கு படிப்பான், சண்முகம் படிப்பில் பின்தங்கிய நிலையிலேயே இருந்தான். கணேசனின் தாய் ஒரளவு படித்தவர். அதனால் கணேசனுக்கு தினமும் பாடங்களைச் சொல்லிக் கொடுப்பாள். சண்முகத்தின் தாயோ எழுத படிக்க மட்டுமே தெரிந்தவள். கணேசனின் தாய் கணேசன் படிக்கும் போது சண்முகத்தை விரட்டி விடுவாள். எவ்வளவு கெஞ்சி சண்முகத்தின் தாய் கேட்டாலும் சொல்லி கொடுக்க மாட்டாள். சண்முகத்தின் தாய் மிகவும் வேதனைப்பட்டு தினமும் இறைவனை வேண்டினாள்.

ஒரு நாள் தன் சகோதரியைப் பார்க்க சென்றாள். சகோதரி மிகவும் இறைபக்தி உடையவள். அவள் சகோதரியிடம் தன் மகன் சரியாக படிக்காததைப் பற்றி கூறி அழுதாள். சகோதரி அவளிடம் ஒரு பதிகத்தைக் கொடுத்து “தினமும் மனமுருகி இதை படி இறைவன் அருள் புரிவார்” என்றாள். சண்முகத்தின் தாயும் இப்பதிகத்தை தினமும் மனமுருகி படித்து இறைவனை வேண்டினாள்.

ஒரு நாள் சண்முகத்தின் தாயை அவர்கள் வீட்டின் சொந்தகாரர் காமாட்சி சந்தித்தார். காமாட்சி பல ஆண்டுகள் அயல்நாட்டில் வசித்து வந்தாள். தற்போது சொந்த ஊருக்கே வந்து விட்டாள். அவள் சண்முகத்தின் தாயிடம் சண்முகத்தைப் பற்றி விசாரித்தாள். சண்முகத்தின் தாய் கண் கலங்கி சண்முகம் படிப்பில் பின்தங்கி இருப்பதை கூறினாள். அதற்கு காமாட்சி " கவலைப்பாடாதே தினமும் என் வீட்டிற்கு சண்முகத்தை அனுப்பி வையுங்கள். நான் அவனுக்கு பாடங்களை சொல்லி தருகிறேன்" என்று கூறினாள். சண்முகம் தினமும் காமாட்சியிடம் பாடங்களைக் கற்று கல்வியில் சிறந்த விளங்கினான். இதிலிருந்து இப்பதிகத்தின் மகிமையையும், இறைவன் காமாட்சியின் மூலம் சண்முகத்திற்கு அருள் புரிந்ததையும் அறியலாம்.

அன்பர்களே! இந்த பதிகத்தின் மகிமையை என்னென்று சொல்வது நீங்களும் மனமுருகி நம்பிக்கையுடன் பதிகங்களைப் பாராயணம் செய்து பலன் பெறுவீர்களாக. இன்னும் மற்றொரு பதிகத்தில் மீண்டும் சந்திப்போம்.

அனைவருக்கும் நன்றி

திருச்சிற்றம்பலம்

அன்புடன்<br>கலாவதி, ஊட்டி

# தெரிந்த புராணம், தெரியாத கதைகள்

மகாபாரத கதாப்பாத்திரங்களின் முன் ஜென்மமும் அவர்கள் யாருடைய அவதாரமும்?

சென்ற பதிப்பில் மஹாபாரதத்தின் சில கதாபாத்திரங்களின் முன்ஜென்மம் பற்றியும் அவர் யாருடைய அவதாரம் என்றும் பார்த்தோம். அதனுடைய தொடர்ச்சியை இப்பதிப்பில் காண்போம்.

**மாவீரன் கர்ணன்:**

சூரிய புத்திரன் கர்ணன் முன் ஜென்மத்தில் சகஸ்ரக்கவச்சன் என்ற அசுரனாக பிறந்தான். அவர் தவமிருந்து பிரம்மாவிடம் யாரும் தன்னை அழிக்க முடியாத 1000 கவசங்களை தன் உடலில் பொருத்திக் கொண்டான். அசுரர்கள் என்றாலே தேவர்களை துன்புறுத்தி அவர்களின் பதவியை அடைய விரும்புவார்கள் அதுபோல் சகஸ்ரக்கவச்சனும் முறியிடும் பொது யாராலும் அவனை முறியடிக்க முடியவில்லை. அவனுடைய ஒரு கவசத்தை அழிக்க ஒருவர் 12 வருடம் தவம் இருந்தும் மீண்டும் 12 வருடம் போர் புரிய வேண்டும். எனவே, 24 வருடங்கள் ஆகும் ஒரு கவசத்தை அழிக்க, யாராலும் செய்யா இயலாத காரியம் கூட. எனவே தேவர்கள் அனைவரும் விஷ்ணுவிடம் வேண்டினார். இதனால் விஷ்ணு நரண், நாராயணன் என இரு அவதாரம் எடுத்தார். நரண் 12 வருடம் தவம் புரிய நாராயணன் 12 வருடம் போர் புரிவார். இப்படி பல வருடங்கள் போராடி 999 கவசங்களை அழித்தனர். அதற்குள் அந்த அசுரன் ஒரு கவசத்துடன் சூரிய லோகம் சென்று விடுவான். அடுத்த ஜென்மத்தில் கர்ணனாக அந்த அசுரன் ஒரு கவசத்துடன் பிறந்தான். அதனால் அர்ஜுனன் நரணாகவும் கிருஷ்ணர் நாராயணராகவும் பிறந்து கர்ணனின் ஒரு கவசம் அழிப்பதற்கு முற்பட்டனர். அதற்குள் தேவ இந்திரன் கர்ணனின் கவசத்தையும் குண்டலங்களையும் யாசகமாக வாங்கி சென்றிடுவார்.



"கர்ணனின் ஒரு கவசத்தை அழிப்பதற்கே மஹாபாரதப் போர் நடந்தது", என்று சிலர் கூறுகிறார்கள்.

அன்புடன்

செல்வி அ. பூஜிதா

*****

# நூறாண்டு ஜோதி

ஸ்ரீ மஹாபெரியவா நூறாண்டு ஜோதி மலர் - பகுதி 3-ல் இருந்து எடுக்கப்பட்ட கட்டுரைகளை இம்மாத பூர்ண பலத்தில் சேர்த்திருக்கிறோம். ஆன்மீக அன்பர்கள் படித்துப் பயன் பெறுக. இங்கே கீழே உள்ள கட்டுரைகள் தங்களை போன்ற ஆன்மீக அன்பர்கள் படித்து பயன் பெரும் எண்ணத்துடனேயே சேர்க்கப்பட்டுள்ளது. இதில் எந்த விளம்பர நோக்கம் இல்லை. இந்த கட்டுரைகள் தெரிவிக்கும் கருத்தும், எழுத்துக்களின் சுவையும், அந்த ஆசிரியரின் பாதங்களுக்கே சமர்ப்பிக்கிறோம்.

## இதோ தெய்வம்! இதே தெய்வம்!

### (T.S. சாம்பமூர்த்தி சிவாச்சாரியார், காளிகாம்பாள் தேவஸ்தானம், சென்னை - 1)

### லோகாச்சாரியாருக்கு நூறாவது ஜெயந்தி விழா

நம்மை பரவசப்படுத்துகிறது இந்த எண்ணம்! இது எதோ ஒரு தனி மனிதனுக்கு நூறு வயது ஆனதற்கான விழாவா? அல்ல!

தத்துவங்கட்கு நூற்றாண்டு!
தவத்திற்கு நூற்றாண்டு!
வேதாந்தத்திற்கு நூற்றாண்டு!
வித்தகத்திற்கு நூறாண்டு!
எளிமைக்கு நூற்றாண்டு!
இனிய பண்பிற்கு நூற்றாண்டு!
ஞானத்திற்கு நூற்றாண்டு!
மோனத்திற்கு நூற்றாண்டு!
விழுமிய பேரறிவுக்கு நூற்றாண்டு!
பக்திக்கு, பண்பிற்கு நூற்றாண்டு!

இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம். கணங்கணம் தோன்றி, கணங்கணம் மறையும் தினம் பல வேடிக்கை மனிதர்களே நிறைந்த இக்கலியுகத்தில், இந்திய மண்ணின் பாரம்பர்ய வாசனையை நுகர வைக்கும் தவக்கோலம். நிமிடத்திற்கு நிமிடம் பயனுள்ள பூசையும், புனஸ்காரமும், தவமும், தியானமும், இன்சொல்லும், இனிய உரையும் ஒழுக்கமும், அடக்கமும், பேரறிவும், பேராற்றலும்!

ஜெகதாச்சாரியாரைத் தேடி உலகம் வருகிறது. அரசியல் தலைவர்களும், ஆன்மீகப் பெரியவர்களும், கலைஞர்களும், வித்வான்களும், ஆன்றோரும், சான்றோரும் வருகின்றனர்.

எளிமையில் எளிமையான இவரைத் தேடி ஏழையிலும் ஏழை வருகிறான். பணக்காரனிலும் பணக்காரன் வருகிறான். இவரது பார்வையே போதும் என எண்ணுபவர் அவரது பாத தரிசனம் வேண்டும் எனத் துடிப்பவர், தம் குறையை இவரது காதில் போட்டுவிட்டாலே

போதும் என ஏங்குபவர், இவரது ஸ்பரிசம் பட்ட பிரசாதம் கிடைக்காதா எனக் கருதுபவர், இப்படி ஆயிரக்கணக்கானோர்.

இவர் எங்கு தங்கி இருப்பினும், இவரைத் தேடித் தொடர்ந்து, "யானுனை தொடர்ந்து சிக்கெனைப் பிடித்த" ஆனந்தத்தில் திளைப்பதைக் காண்கிறோம்.

ஆச்சார்யர் சித்துக்கள் புரிவதில்லை, அற்புதங்களை நிகழ்த்துவது இல்லை. 'நான்' என்ற தோரணையில் என்னை நம்புங்கள், என்று என்றும் சொன்னதில்லை. இருப்பினும், இவரைத்தேடி, மக்கள் இவர் இருக்கும் இடம் தேடி ஒடுக்கின்றனரே ஏன்? இவர் எதிரில் நிற்கிறபோது, தெய்வ சந்நிதியில் நிற்கும்போது ஏற்படும் மன நெகிழ்வும், உணர்வும், பரவசமும், பரமானந்தமும் ஏற்படுகிறதே, அதனால்தான், "இதோ தெய்வம், இதே தெய்வம்." என்ற நம்பிக்கை வருகிறதே. அதனால்தான் எனது சிறுவயது முதல், ஆச்சாரியாரை நான் தரிசித்துப் பயன் பெற்று வருபவன். காளிகாம்பாள் கோயிலுக்குத் தும்பைப்பூ சொர்ணமாலை தந்தார். "இந்த இயந்திர விசேஷம், அம்பாள் விசேஷமாக இருக்கிறாள். ரொம்ப உயர்ந்த இடம் கிடைத்து இருக்கு. கெட்டியாகப் பிடித்துக் கொள் ஸ்ரத்தையாக பூஜை செய்" என்றார்.

உற்சவ மூர்த்தம் உள்ள அறையிலே, எங்கள் ஆத்ம சிவபூஜை சாளக் க்ராமங்கள் உள்ளன. அந்த அறைக்குள் சென்று தீர்த்தத்தை தமது கரங்களால் சம்போரோக்ஷணம் செய்தார்.

"உங்க அப்பா ரொம்ப ஸ்ரத்தையாய் பூஜை பண்ணினவர். அவர் மாதிரியே நீயும் பண்ணு", என ஆசி வழங்கினார். நான் அன்புத் தொல்லைக்குக் கட்டுப்பட்டு பலமுறை கும்பாபிஷேகம், பூஜைகள் என வெளிநாட்டிற்கு செல்பவன். "மற்ற யாராவது செய்து கொண்டு போகட்டும், நீ வெளிநாடு போகாதே" என என்னைப் பார்கிறபோதெல்லாம் அறிவுரை வழங்கியதுண்டு. எனக்குள்ள சூழலால் அவரது அறிவுரைக்குக் கட்டுப்பட இயலவில்லை. பிறகு ஓர் முறை, "சரி சரி நீ ஆசைப்பட்டுப் போகவில்லை. மற்றவர்கள் ஆசைக்கு கட்டுப்பட்டு வெளிநாடு போகிறாய், பரவாயில்லை போ", என அவரே எனக்கு உணர்த்தி அருளினார்.

எனக்கு கடந்த மூன்றாடுகட்கு முன் மீனம்பாக்கம், விமான நிலையத்தருகே ஓர் பெரிய கார் விபத்து நடந்தது. மருத்துவமனையில் சில நாட்கள் இருந்தேன். அப்போது காஞ்சிப் பெரியவர் அனுப்பிய பிரசாதம் வந்தது. மனம் நெகிழ்ந்தேன். உடல் நலமானதும் மஹதாசாரியாரை தரிசிக்கப் போனேன். "முத்திரை எல்லாம் சிரமம் இன்றிப் போட முடிகிறதா"? என்று கேட்டார். உடல்நலம் எப்படி என்பதை விட பூஜைக்குத் தடையில்லை என்று தாயிற் சிறந்த தயவோடு அவர் கேட்ட கேள்வியால் நான் உருகிப்போனேன். ஆய கலைகள் அறுபத்திநான்கினையும் ஏய உணர்ந்தவர், உணர்விப்பவர். நம்மிடையே நடமாடும் மந்திரம், யந்திரம், தந்திரம்!

பாவப் பிணிக்கு மருந்துமாகி, தீராத வினை தீர்ப்பவர்
அவர்வாழும் காலத்தில் நாம் வாழ்வது
நாம் செய்த பாக்கியம்
அவர் ஒரு சரித்திரம்!

இன்னும் ஒரு நூறாண்டு அவர் வாழ்ந்து உலகுக்கு வழிகாட்டி லோகாச்சாரியராக தொடர்ந்து தொண்டு செய்ய இறைவனைப் பிரார்த்திப்போம்.

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு
பல கோடி நூறாயிரம் உன் செவ்விதிருக்காப்பு!
அடியோமோடும் நின்னோடும்
பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு!

*****

## தடுத்தாட் கொண்ட புராணம்

**ரா. கணபதி - சென்னை**

"நாயேன் பல நாளுநினைப்பின்றி மனத்துன்னை
பேயாய்த் திரிந்து எய்த்தேன்; பெறலாகா அருள்பெற்றேன்!"

-சுந்தரர்

1957-மத்தி, அப்போதுதான் ஸ்ரீ சரங்களின் முதல் தர்சனம் பெற்றது. ஆனால், 'தர்சனம்' என்ற பக்தி பாவத்துடனா போனேன்? இல்லவேயில்லை. வேண்டா வெறுப்பாகப் போனேன்.

குழந்தை பிராயத்திலிருந்து இருந்து வந்த தெய்வ ஈடுபாடும் மதாசார நம்பிக்கையும் இதற்கு ஒரு ஒன்பது வருஷத்திற்கு முன்பிருந்து, அதாவது என் பதிமூன்றாம் வயதிலிருந்து ஏனோ, எப்படியோ தவறியே போய்விட்டன! ஜே.கே. பெயர் கூட கேள்விப்பட்டிராத காலமென நினைக்கிறேன். ஆயினும் அவரது கருத்தாகப் பின்னாளில் நான் அறிய வந்த மத மரபு, --மறுப்பு அப்போது தன்னால் கொழுந்து விட்டு எழுந்து முந்தய ஈடுபாடுகளையும், நம்பிக்கைகளையும் வற்றடித்து விட்டது. உயிர்த் தத்துவமாக ஒன்றே ஒன்றுதான் இருக்கிறது என்ற உறுதி மட்டுமே வலுவாக நின்றது. ஆனால், அதற்குக் கடவுள் என்ற பெயர் கொடுக்கக் கூட பிடிக்கவில்லை. ' அந்த ஒரு தத்துவத்தில் அடங்கிவிட்டால் அதுவே எல்லாம்', என்றோ, ஞானம் என்றோ ஒரு சாதனை மண்ணாங்கட்டியும் வேண்டாம். அதுவாகவே பிடித்து அடக்கிக் கொண்டால்தான்உண்டு," என்ற விசித்திரமான கொள்கை, விசித்ரமாகவே தோன்றாமல் ஏற்பட்டிருந்தது. இந்த நிலையில் அந்த ஒன்றைப் பல நாம ரூபங்களில் தெய்வங்களாக வழிபடுவது ஏற்கவே முடியவில்லை.

ஞானம், பக்திகளே இப்படிப் பறந்துபோன சூறாவளியில் கர்மத்தைப் பற்றிக் கேட்பானேன்? ஒன்றேயான உயிர் தத்துவத்தின் ஏகப் பெறுவாழ்வுக்கும் நம்முடைய சின்னஞ்சிறு வாழ்வுகளுக்கும் ஒரு சம்பந்தமுமில்லை. இச்சிறு வாழ்வுக்கான ஒழுங்கு முறைகள் என்ற பெயரில் கட்டிப்போடும் கர்ம மார்க்கம் என்பது மார்க்கமேயில்லை. சாதனை என்று ஏதேனுமொன்று இருக்குமாயினும் கூட, அந்தப் பெயரைப் பெற இதற்கு லாயக்கில்லை என்பதே தீர்மானமாயிற்று. இந்த 'மார்க்கத்தில் கையேடு கையாக வரும் தர்ம சாஸ்த்ர ஆச்சார விதிகளோ, அடியோடு கரித்தன. "வேறெந்த நாட்டுக்குமில்லாமல் இங்கே மட்டும் என்ன

இத்தனாயிரம் சமூக வித்யாசங்கள்"? என்று கடுத்தது. பொதுவாக மதம் என்பதே பேதைமை என்றால், இந்த வைதீக ஆச்சாரங்களோ முழு முட்டாள்தனம் என்பதே தீர்ந்த அபிப்பிராயமாயிற்று. 'தானே முளைத்து தழைத்த இந்த ஸநாதன சம்பிரதாய எதிர்ப்புக்குச் சுதந்திர போராட்ட காலத்திலிருந்தே வெகுவாகப் பரவி வந்த சமத்துவம் எனப்படுகிற அடிப்படையிலான சீர்திருத்தவாதம் உரமூட்டியது.
ஆயினும் வீட்டிலோ வெளியிலோ என் புரட்சிக்க கருத்துக்களைக் காட்டிக் கொள்ளாமல், அதே சமயம் குறிப்பிடத்தக்க மதாசாரணைகளும் இன்றிக் காலம் கடத்தி வந்தேன்.

அப்போதிருந்த பொதுவான மனா நிலையைச் சொன்னேன். ஆனால், அதிலேயே விலக்காகச் சில 'அன்யஸ்வர' சாயல்கள் எட்டிப் பார்ப்பதும், அவற்றையும் நான் இந்தப் பொது 'மேள'த்திலேயே அமுக்குவதும் நடைபெற்றுத்தான் வந்தன. அவற்றை விளக்கப் புகுந்தால், இந்த ஸ்வய புராணம் அவசியம் இல்லாமல் நீளும். காணாப் பூரணரின் சரிதத் தொடர்பாக, இவ்வளளவு சொன்னது போதும்.

மொத்தத்தில் அந்த '57- மத்தியில் ஓரிக்கை எனும் ஓரிரவிருக்கயில் என் பெற்றோருடன் ஸ்ரீ சரணர்களை முதன் முறை தர்சிக்கச் சென்ற போது, தர்சனம் என்ற எண்ணமின்றி, பார்த்துத் தீரவேண்டி இருக்கிறதே, என்ற 'திவ்ய' மான எண்ணத்தோடேயே சென்றேன். 'சொல்வது அத்வைதம்' அப்படிப்பட்டவர்களுக்கு மடமாம். அது போதாதென்று அங்கே அத்வைத வாடையே இல்லாத பூஜைதான் முக்கியமான கார்யமாம், அதையும் விட மோசம் ஆயிரத்தெட்டு வித்யாசங்களைக் கட்டி அழும் ஆச்சாரங்களைக் "கொந்திக் கொண்டிருப்பது. இவர்களை ஆதரிக்கும் வரையில் உலகம் உருப்படாது. நல்லவேளை, பெரும்பாலான மக்கள் இவர்களை அதிகம் கண்டுகொள்ளாமல் இருக்கிறார்கள். என்ற 'தேர்ந்த' 'தெளிந்த' சிந்தனையோடு ஸ்ரீ சரணர்களின் முகாம் சென்றடைந்தேன்.

அப்போது மாலை ஐந்து மணியிருக்கும், தர்சனம் முடித்து நாங்கள் ஸ்ரீபெரும்புதூர் திரும்பி (அப்போது அங்குதான் வாஸம்) எங்களுக்கு கார் உதவியிருந்த அன்பருக்கு அதை ஏழு மணிக்குள் திருப்பி அனுப்ப வேண்டியிருந்ததால் அரை மணிக்குமேல் அங்கிருப்பதற்கில்லாமல் இருந்தது. வழியில் காமாக்ஷி ஆலயத்தில் தாமதமானதால் இப்படியாயிற்று. அதில் தந்தையாருக்கு மிகவும் வருத்தம்.

ஸ்ரீ சரணர்கள் குழந்தைப் பிராயத்தில் விழுப்புரத்திலிருந்த போது அவருடைய தோழர்களில் ஒருவர் பிற்காலத்தில் தென்னாற்காட்டில் பிரபல வழக்குரைஞராக ஸ்ரீ சிதம்பரய்யர் எம். எல். ஏ யும் ஆனவர். அந்த ஆதி நாளில் என் பெரிய பாட்டனாரும், எங்கள் குலதேவியுடன் ப்ரத்யக்ஷமாக உரையாடக்கூடிய புனிதருமான துரைப்பா அண்ணா எனப்பட்ட துரைஸ்வாமி சாஸ்திரி என்ற இல்லறத்துறவி விழுப்புரத்தில்தான் ரிவின்யூ அதிகாரியாயிருந்தார். இல்லறத துறவிக்கு மகப்பேறில்லாவிட்டாலும், அக்கால அவிபக்த குடும்பமாதலால், வீட்டில் தாயாதிக் குழந்தைகள் புழக்கம் உண்டு. அவர்களில் ராஜா என்ற பிள்ளை தமக்கும், குட்டி ஸ்ரீ சரணர்களுக்கும் ஸ்நேஹம் என்றும், தாமும் குட்டி ஸ்ரீ சரணர்களும் ராஜாவோடு கூட எங்களகத்தில் முப்பாட்டி ஒருத்தி பிசைந் போட்ட 'பழையது' உண்டதுண்டு என்றும்

சிதம்பரய்யர் கூறியிருந்ததை முடியுமாயின் ஸ்ரீ சரணர்களின் காதில் போட்டு உறுதி பெறவேண்டுமென்று தந்தையாருக்கு ஆசை. இது போல் விஷயம் பேச மிகவும் தயங்கும் பிரம பவ்ய பக்தர்தானவர். ஆனாலும் அன்று பகல் நாங்கள் காஞ்சி வந்தபோதே ஸ்ரீ சரணர் அன்றைக்கு உத்ஸாஹமாக ஊர் கதைகள் பேசிக் கொண்டிருப்பதாகத் தெரிய வந்ததால், நாங்களும் அவருடன் சாவகாசமாகப் பொழுதைச் செலவிட்டு, மனதிலிருப்பதை கேட்கலாமென்று எண்ணினார். எனினும் பிற்பாடு மாலை நான்கு மணிக்கு காமாக்ஷி ஆலயம் திறந்தபின் அங்கே அர்ச்சனை முடித்தே ஓரிக்கை செல்ல வேண்டி நேரிட்டு விட்டதால், அங்கே அரை மணிக்கு மேல் இருப்பதற்கில்லாமல் போயிற்று.

இப்படி நிர்பந்தமாச்சே என்று தகப்பனார் நொந்துகொள்ள, எனக்கோ, 'பந்தப்படுத்தும் இந்தப் புழுக்கச் சூழலில் அரை மணிக்கு மேல் அவதிப்பட வேண்டாமே! என்று கொஞ்சத்தில் கொஞ்சம் ஆறுதலாயிருந்தது.

ஸ்ரீமடத்தின் முகாமாயிருந்த பழைய ஒட்டுக் கட்டிடம். அங்கே குடியிருந்த, கூடியிருந்த பஞ்ச கச்ச -குடுமி 'பத்தாம் பசாலிகள்', மடிசார் மாமிகள், முக்காடுக் கைம்பெண்டிர், "பெரியவா, பெரியவா" என்ற அடித்தொண்டை பக்திக்கு, கிசுகிசுப்பு யாவும் என் எதிர்மறை உணர்ச்சிக்குத் தூபம் போட்டன.

சட்டையைக் கழற்றி விட்டுத்தான் முகாமுக்குள் போக வேண்டும் என்று தெரிந்தபோது எதிர்ப்பு எரிச்சலாகவே 'உயர், பரிணாமம்' கண்டது. நல்ல அத்வைதம் இப்படியொரு ஆச்சார்யர்! இப்படியொரு கேள்வியே கேட்காத தெரியாத அஜக் கூட்ட சிஷ்யர்கணம்!" என்று மனசு பொறுமியது.

நாலு பேர் பார்க்கச் சட்டையைக் கழற்றிவிட்டு நிற்க, நான் பட்ட பாடு உண்டே! "ஏண்டா வந்து தொலைந்தோம்"? என்றே நெஞ்சாழத்தில் கோப வேதனை குமுறியது. (இதற்கு மாற்றுப் படலம் பிறந்த பின்னுங் கூடச் சிலகாலம் சட்டையை மட்டும் அசட்டை செய்ய முடியாமலேதான் சிரமப்பட்டேன். அன்பர் 'பரணீதரனுக்கும் ஆரம்ப நாட்களில் இதே 'காம்ப்ளக்ஸ்' இருந்ததென்று படிக்க ஆச்சர்யமாகவும், ஆசுவாசமாகவுங்கூட இருந்தது).

முகாம் கட்டிடத்தில் பார்த்தபோது எங்களுக்கு முன்னதாகச் சென்றவர்கள் முற்றத்தில் நமஸ்கரித்து தெரிந்தது. இந்த சாஷ்டாங்க நமஸ்கார ஸமாச்சாரம் அன்றைய ஸ்வதந்திர விறைப்புக் குணத்திற்கு அடியோடு ஏற்காத ஒன்றாக இருந்தது; இப்பேற்பட்ட விறைப்பு வீரனுக்கு அன்று தானே தனக்கு இஷ்டமில்லாத ஒருவர் முன் அப்படி விழத்தான் வேண்டுமென்பது சொல்லி முடியாத மானபங்க உணர்ச்சியை ஏற்படுத்தியது. 'யாரோ கிழவர் நமைச் சிறுமைப் படுத்துகிறார்!" என்பதில் அந்த ஒருவர் மீது இதுவரை பொதுவாக இருந்த மாற்று மனப்பான்மை சொந்த ஹோதாவில் --ஹோதா சரிவதில்--ஓங்கி வளர்த்தது.

ஆக, பக்தி ச்ரத்தைகளை சமூலம் துடைத்துப் போட்ட மனா நிலையிலாக்கும் ஸ்ரீ சரணர்கள் முதற் காட்சி பெற உள்ளே நுழைந்தேன்!

முற்றத்தை அடுத்த கூடத்தில், வெளிச்சம் போதாதா ஒரு மூலையில் அவர் அமர்ந்திருந்தார். விபூதி, ருத்ராக்ஷம் எதுவுமின்றி, ஒரு சாயம் போன காவி "பேருக்கு" அவர் மேல் தொற்றிக் கொண்டிருக்க அமர்ந்திருந்தார்.

மங்கல்தான் எனக்குத் தெரிந்தது. மங்கள மூலம் என்ற விழிப்பு ஏற்படவில்லை. நீறு பூத்த நெருப்பு என்று காணாமல் வெறும் நீற்றை மட்டுமே - 'திரு'நீரகத் தெரியாத வெறும் சாம்பலையே கண்டேன்.

ஆம். அந்த உருவம் இந்த விறைப்பு - வீறாப்புக்காரனை கொஞ்சங்கூட "இம்ப்ரெஸ்" செய்யவில்லை. அவர் எப்படித் தெரிந்தாரென்றால்.

இதுவரை எழுதி வந்திருப்பதை படிக்கும்போதே பக்தகோடிகளில் சிலருக்கு என்னை அடித்தாலென்ன என்று தோன்றியிருக்கலாம். அடுத்து எழுதவிருப்பதைக் குறித்தோ இன்றைய எனக்கே அன்றைய என்னை ஒரு போடு போட்டாலென்ன என்று தோன்றுகிறது. அன்று அவர் எப்படித் தெரிந்தாரென்றால் கோவில் வாசலில் கப்பரையை வைத்துக்கொண்டு ஆண்டிப் பட்டாளம் உட்கார்ந்து இருக்குமே. அதிலிருந்து பிரித்துச் சொல்ல முடியாத ஓர் அனாமதேயமாகத்தான்!

பொதுவாக உருவத்தைப் பார்த்தபின் முகத்தைப் பார்த்தேன். அவரும் பார்த்தார்...குறு குறு என்றிருந்தது. கண்களைத் தாழ்த்திக் கொண்டேன், என்ன வெட்கம்? அந்த ஒரு பார்வையே மின்வெட்டாக உள்ளே புகுந்து என்னுடைய விறைப்பு--வீராப்பு மனப் பான்மைக்காக என்னை வெட்க வைத்து விட்டதா? என்ன? இல்லை இல்லை! அப்படியெல்லாம் அசாதாரணமாக ஒன்றும் நடந்துவிடவில்லை. ஆனாலும் அவர் பார்ப்பதில் வெட்கம் ஏற்படவே செய்தது. வெற்றுடம்பைப் பார்க்கிறாரே என்பதாலா? சொல்லத்தெரியவில்லை.

எங்களுக்கு 'ஜஸ்ட் 'முன்னாள் (உள்ளே சென்ற ஒரு முக்காட்டுப் பாடி பாத்திரத்தில் கொண்டு வந்த சீடை, முறுக்குகளை ஒரு பிரப்பந் தமுக்கில் காலிபண்ணி தமுக்கை ஶ்ரீ சரணர்களுக்கு முன் அதி விநயமாகக் கூனிக் குறுக்கிக் கொண்டு ஸமர்ப்பித்து விட்டு முற்றத்தில் நமஸ்கரித்தாள்.

கல்லு கல்லாகத் தெரிந்த அந்தச் சீடை, முறுக்குகளை பார்க்கவே சிரிப்பு வந்தது. அதோடு பரிதாபமாகவுமிருந்தது.' பெரியவா பெரியவா' என்று சில இந்த மாதிரி அசட்டுப் பாட்டிகள் எதோ பெரிதாக நினைத்துக் கொண்டு தங்கள் இல்லாமையிலும் பக்ஷணம், பணியாரம் என்று அடுப்படியில் வெந்துகொண்டு பண்ணி எடுத்து வருகிறார்களே! என்று. போனால் போகிறதென்று ஶ்ரீ சரணர்களிடமும் பரிதாபப்பட்டேன். இம்மாதிரியான 'பக்ஷணப் பயங்கரங்களை' சாப்பிடுகிறார் என்று. அவருடைய கடும் ஆகார நியமங்களை அறிந்திராத எனக்கு அந்த பக்ஷண வகைகள் பரிஜனங்களுக்கே போகுமென்பது தெரியவில்லை. அவரே

அசட்டு பக்தைகள் கொண்டு வந்து கொடுக்கும் மூன்றாந்தர பக்ஷணங்களை மொக்கிக் கொண்டு தாமும் ஒரு சங்கராச்சாரியார் என்று பேர் பண்ணி வருவதாகவும் நினைத்தேன்.

நமஸ்கரித்தெழுந்த பாட்டி ஒடுங்கி, ஒதுங்கி நின்றாள்.

அவளைப் பற்றி ஸ்ரீசரணர்களுடன் இருந்த பாரிஷதர் அவரிடம் ஏதோ சொன்னார்.

என்ன பதில் சொல்லப் போகிறாரென்று ஸ்ரீ சரணர்களின் முகத்தைப் பார்த்தேன். அவர் ஏதும் சொல்லவில்லை. என்னைத்தான் பார்த்துக் கொண்டிருந்தார். எனக்கு வெட்கமாக இருந்தது. கண்ணைத் தாழ்த்திக் கொண்டேன். ஆனாலும் அவர் பார்த்துக் கொண்டேதான் இருக்கிறாரென்று உள் மனத்துக்குத் தெரிந்தது. அது மட்டுமில்லை. இன்னும் உள் மனத்துக்குத் தெரிந்தது. நான் உள்ளே நுழைந்ததும் முதலில் பார்த்தார், அதிலிருந்த அந்தப் பார்வை என்னை விட்டு நகரவில்லை என்று! சிறிது போது நகர்ந்தது. பதிலேதும் வராததால் பாட்டி ஓரத்துக்கு ஒதுங்கி விட்டாள். எங்கள் 'டர்ன்' வந்தது. தகப்பனார் எண் சாணுடம்பு நாலு சாணாக, கையுறையை ஸமர்ப்பித்தார். அவர் முன்பே சொல்லியிருந்தபடி அவர், என் தாயார், நான் மூவரும் சேர்ந்து ஏக காலத்தில் நமஸ்கரித்தெழுந்தோம்.

"சென்சிடிவ்" உடம்பானதால் வைக்கோல் ஸ்பரிசத்தில் சுணையெடுத்தது. ஸ்ரீ சாரணர்கள் பார்வையோ 'சென்சிடிவ்' உள்ளத்தில் சுணையெடுத்தது. ஆம், இன்னமும் அவர் பார்வையை என்; மேலிருந்து அகற்றவில்லை. நான் திருட்டுத் தனமாகக் கண்களை லேசாக உயர்த்தி அவரைப் பார்ப்பதும், அவரும் பார்க்கிறார், பார்க்கிறார் பார்த்துக் கொண்டேயிருக்கிறார்கரென்பதில் தாழ்த்திக்கொள்வதுமாக இருந்தேன்.

நமஸ்கரித்தெழுந்த பிதா ஒன்றும் சொல்லாமல் நின்றார். அதிகாரப் போக்கும் தன முனைப்புமே அவரது பொது இயல்பெனினும், ஸ்ரீ சரணர்கள் என்றால் சப்த நாடியும் ஒடுங்கி நிற்பார். அப்படித்தான் இப்போதும் நின்றார். சாத்வீயான அம்மாவோ, அங்கே வாய் திறப்பாள் என்று நினைப்பதற்கே இடமில்லை.

ஆனால் மற்றவர் வாய் திறந்தாலும், திறக்கா விட்டாலும் தாமே பேசி, 'ம்ருது பூர்வ பாஷி'யாக முன்சொல், இன்சொல் பேசி, அவர்களையும் பேச வைப்பவரென்றும், அவர்களுடைய பூர்வீகர் பற்றிய விருத்தாந்தங்களை குடைந்து குடைந்து கேட்டு அவர்களுக்கே புதுப் புதுப் பழைய தகவல்கள் தருபவரென்றும் புகழ் கொண்ட ஸ்ரீசரணர்களும் அன்று வாய் திறந்தாரில்லை. பார்ஷதரே, 'யார்? என்ன? எங்கேயிருந்து? இத்யாதி கேட்டு என் தகப்பனாரை வாய் திறக்க வைத்தார்--'டு த பாய்ண்ட் ' மட்டுமே. அந்நாளில் (அதன்பின் பல்லாண்டுகள் கூட) இடை மனிதரின்றி ஸ்ரீசரணர்களே கேட்டுக் கொள்வார்கள். அன்றோ கேட்டுக் கொண்டார்களா, இல்லையா என்றே தெரியவில்லை. காது திறந்திருத்ததோ, இல்லையோ, வாய் நிச்சயமாகத் திறக்கவில்லை; மறுமொழி கூறவில்லை. கண் திறந்திருந்தது; ஆனால் இன்னொருத்தன் மேலே இருந்தது. மௌனமாகப் போயிற்று நெடுங்காலமாகத் தோன்றிய சில நிமிஷங்கள்.

பொறுத்துப் பார்த்த பார்ஷதர் இன்னும் தரிசனத்திற்கு அடியார்களிருந்ததால் என் தந்தையாரிடம் முடிவாக, "ஏதாவது விஞ்ஞாபனம் இருந்தா பண்ணிக்கலாம்" என்றார்.

"அனுக்கிரஹம் இருக்கணும்" என்று சொல்வதாக, நினைத்து நாத் தழுதழுத்த எதோ குழறினார் தந்தை. பாரிஷதர் பிரசாத மடக்கை முன் நகர்த்தினார். அவர்கள் அப்போதும் திருஷ்டியை பெயர்க்காமலேயே விரல்களால் மடக்கைத் தீண்டி எங்களிடம் கை ஜாடை காட்டினார்கள். மூவரும் சேர்ந்து அதை எடுத்துக் கொண்டோம்.

ஸ்ரீசரணர்களிடத்து துரைப்பாண்ணா அகத்துப் பழையது பற்றித்தான் கேட்க முடியவில்லை என்றில்லாமல், எதுவுமே பேசுவதற்கில்லாமல் ஆக, தந்தையார் தாழ்வார குறட்டுக்கு ஒதுங்கினார். அம்மாவும் நானும் அவரைத் தொடர்ந்தோம். அந்த ஓரமும் தூரமில்லை என்று ஸ்ரீ சாரணர்கள் த்ருஷ்டியும் என்மேலேயே தொடர்ந்து படர்ந்தது!

அடுத்து, எங்களுடன் வந்த என் பெரிய சிற்றப்பாவின் மைத்துனர் ஸ்ரீ சரணர்களை நமஸ்கரித்தார். அவரை 'எங்களோடு வந்த' என்பதைவிட "எங்களையே அங்கு வரச்செய்த" என்பதுதான் பொருத்தமாயிருக்கும். அப்போது காஞ்சிபுரத்தில் கோயில்களின் கணக்குத் தணிக்கை அலுவலிலிருந்த அவருடைய அழைப்பின் மேல்தான் நாங்கள் அந்தப் பயணம் மேற்கொண்டதே.

கோயில் ஆடிட்டில் இருந்த தம்மிடம் ஸ்ரீ சரணர்கள் நிறைய பேசுவாரென்று அவர் எதிர்பார்த்திருந்தார். ஆனால் அவருக்கு ஏமாற்றமே கிட்டிற்று. ஸ்ரீ சரணர்கள் அதே மௌனத்தோடு அதே குறிமாராப் பார்வையோடுதான் அமர்ந்திருந்தார்.

பாரிஷதரின் 'அனுகிரக'த்தில் பிரசாதம் பெற்று சிற்றப்பா மைத்துனர் எங்களோடு சேர்ந்து கொள்ள, இனி அங்கு நிற்பதில் காரியமில்லை என்று புறப்பபட்டு விட்டோம். அரைமணிதான் அங்கிருப்போம் என்று நினைத்தவர்கள் கால் மணியிலேயே புறப்பட்டிருப்போமென்று நினைக்கிறேன். ஆனால், ஒரு வேற்றுமனிதரின் 'இடைவிடாத' பார்வையிலிருப்பதென்றால் அந்தக் கால் மணிக்கே கால்யுகத்தின் சுமை ஏற்படுத்தானே? "அப்பாடா" என்று நான் நிம்மதிப் பெருமூச்செறிய, வெளியே வந்து சேர்ந்தோம். அங்கேயிருந்தவர்கள் எல்லாம் ஸ்ரீ சரணர்கள் என் மேல் செலுத்திய கால் மணி நேர் 'நான் ஸ்டாப் ' கடாக்ஷத்தையே பேசி வியந்தார்கள். இப்படியொரு 'பாக்யம்' பெற்ற என்னைப் பாராட்டினார்கள்.

"சித்தேமுன்னே வரை கூட பெரியவா,' பந்தாடிண்டு இருந்தாராம். அதென்ன உங்க பிள்ளையைப் பார்த்ததுல இருந்து அப்படியே மாறி போய் அது மேலே வெச்ச கண் வாங்காம சமைஞ்சுட்டா? இப்படியொரு கடாக்ஷம் கிடைக்கிறதுக்கு மஹா பாக்யம் பண்ணியிருக்கணும். கொழந்தை ஆனாலும் பூஞ்சையா, புல் தடுக்கியா இருக்கோன்னோ? அதான் உடம்பு நன்னா ஆகணும்னு த்ருஷ்டியாலேயே ஆரோக்யத்தை இன்ஜெக்ஷன் பண்ணியிருக்கா “என்று சீடை-முறுக்கு பாட்டி, தன்னை ஸ்ரீ சரணர்கள் கவனிக்காததையும் பொருட்படுத்தாமல் என் பெற்றோரிடம் மனசார சொன்னாள்.

நான் உள்ள அசடு வழிந்து கொண்டு நின்றிருக்க வேண்டும்! அவர்கள் சொன்ன 'பாக்யத்தின்' சங்கேதமாக உள்ளே ஒரு உணர்ச்சியும் ஏற்பட்டிருக்கவில்லையே? ஸ்ரீசரணர்களைப் போல ஸ்தானத்திலுள்ள ஒருவர் கால் மணி நேரம் மற்ற எல்லாக் கார்யங்களையும் நிறுத்திவிட்டு, விடாமல் பார்ப்பது என்றால் அது ஸாதாரண விஷயமல்லாதானெனினும் அப்போது அப்படித் தெரியவேயில்லை. ' அப்படியொன்றும் இன்ஜெக்க்ஷனாகவோ, கவிகள் சொல்லும் பார்வைக் கணையாகவோ அந்தப் பார்வை துளைத்துக் கொண்டு உள்ளே போய்விடவில்லையே! அல்லது பூச்சொரியலாக மென்மை கூட்டவோ, அம்ருத கடாக்ஷம் என்பதாக இனித்துக் குளிர்ந்து உள்ளே பாயவோ இல்லையே! கிழவர் என்னவோ பார்த்தாராக்கும்! என்றே லேசாக நினைத்தேன்.

என் பெற்றோருக்கு அவர்களை ஸ்ரீசரணர்கள் கண்டு கொள்ளாவிட்டாலும் என்னை இப்படி ஏகமாகக் 'கண்டுகொண்டதில்' திருப்தியும் ஸந்தோஷமும், அடிநாளிலிருந்தே நோஞ்சான், நாலைந்து வருஷம் முன்பு கவலைக்கிடமாகப் படுத்துப் பிழைத்தாலும் ஓவர் டோஸாலேயே நலிவு கண்டவன். அவர் கண்டு கொண்டதில் வலிவு காண்பேனென்று ஊருக்குத் திரும்பும் வழியில் பேசிக்கொண்டார்கள். உணர்ச்சிக் கூத்துகளுக்கு இடம் கொடாதவர்கள் ஆதலால், இத ஓவர்டோஸாகப் பேசாமல் விட்டும் விட்டார்கள். (அதனாலேயே பிற்பாடு நான் நல்லாரோக்கியம் பெறாமலே இருந்ததில் ஸ்ரீசரணர்களிடம் ஏமாற்றமடையாமலும் இருந்தார்கள்!)

என்னைப் பொறுத்த மட்டிலோ அந்த ஓரிக்கை நிகழ்ச்சியும், அதன் நடுநாயகரும் 'ரைட் ஆப்' செய்யப்பட வேண்டிய விஷயங்களாகவே தோன்றியது. அன்றரவு படுக்கும் முன்பே தன்னியல்பாக 'ரைட் ஆப்' ஆகியும் விட்டது.

மறுநாட்களை எழுந்திருக்கும்போது --ஸ்ரீ சரணர்கள் நினைவுதான்!

தொடர்ந்தும் அதே நினைவு!

அவரை நினைக்கிறேன் என்பது எனக்கே தெரியாமல், ஆனாலும் அவர் நினைவாகவே இருக்கிறேன்---நாள் முழுவதும், மறு நாளும், மூன்றாம், நாலாம் நாளுங்கூட!

'ஓ, அவரையா நினைக்கிறோம்? என்று தெரிகிற அபூர்வமான சில சமயங்களை." எதற்காக நினைக்கிறோம்?" அந்தக் கிழவருக்கும் நமக்கும் என்ன சம்பத்தம்? என்ற கேள்வியும் எழுகிறது!

ஆனாலும் அந்த நினைவு மஹா பிரவாகம் சிற்றலையான கேள்வியை உடனுக்குடனே விழுங்கியும் விடுகிறது. அவரை நினைப்பதை தவிர வேறு எதுவும் செய்யத் தெரியவில்லை; செய்ய முடியவில்லை.

'ஏன் நினைக்க வேண்டுமென்று காரணம் தேடுவானேன்? ஏன் நினைக்காமலிருக்க வேண்டும்? நெஞ்சத்திற்கு இத்தனை ரஞ்சகமாக உள்ள ஒன்றை ஏன் நினைக்காமல் இருக்க வேண்டும்? அப்படிச் சொன்னால்கூட போதாது. போதவே போதாது. அவரை நினைப்பதற்குத்தான் நினைப்பு உறுப்பாக இந்த அந்த கரணமே நமக்கு இருக்கிறது. அவரை நினைக்கா விட்டால்...?

ஆம்! அந்த உணர்வு அந்த அளவுக்கு ஓங்கியிருந்தது --- 'அவரை நினையாவிட்டால் உயிர் தரிக்க முடியாது!

"மறப்பேன் அலேன் உன்னை; ஓர் கணமேனும் மரக்கின் அன்றே இறப்பேன்; இது சத்தியம், சத்தியம், சத்தியம்!" என்று வள்ளலார் சொல்வதாகும் அன்று என் அனுபவ நிலையாயிருந்தது!

இந்த அதிசய மாற்றம் எப்படி நடந்தது? "மாற்றாரை மாற்றழிக்க வல்லான்", இந்த மாற்றானை அழிக்காமல் இவனுடைய மாற்று மனப்போக்கை மாத்திரம் அழித்து இவனை வாழ்வித்தது எப்படி? அதுவும் மாறாக இருந்த தற்காக இவன் குற்றவுணர்ச்சி கொள்ளாமல், மன்னிப்புக்கு மன்றாடாமல் இத்தனை இயல்பாக, ரம்யமாக.

அன்று படுக்கும் முன் அவரை ரைட் ஆப் செய்தேனே, அல்லது அப்படி நினைத்தேன்! அப்புறம் அந்த இரவு இவனுடைய உன் நினைப்பில் அவர் தங்கி,"ஓரிரவு இருக்கை " கொண்டு, என்ன செய்தார்? நேரிலே 'இம்ப்ரெஸ்' செய்யாதவர் நித்திரையில் எப்படி ஆழ் 'இம்ப்ரெஸ் ' பதித்தார்? விடியும்போது இவன் வாழ்வுக்கே விடிவாக உள்ளுக்கும் உள்ளிதயத்தில் ஸதாகால இருக்கை கொண்டார்? (அந்தக் நாலு நாளுக்குப் பின் ஸதாகால நினைப்பு நலியத்தான் ஆரம்பித்து விட்டாலும் மூன்று மாமாங்க காலத்திற்குப் பின் இன்று இதை எழுதும் பொழுதும் இதயத்திலரும் மெய்ப்பொருளின் மூர்த்திதாமே அவர் என்பது நிச்சயமாகி விட்ட உண்மையாகத்தானே தெரிகிறது?) அவரில்லையே இவன் 'ரைட் ஆப் ' ஆக வேண்டியதுதான் எப்படி ஆக்கினார்? இன்ஜெக்க்ஷன் போட்டதாகவோ, அம்பு எய்ததாகவோ, மலர் சொரிந்ததாகவோ, அமுதம் ஊட்டியதாகவோ ஒன்று தெரியவில்லை என்றேன். ஆனால், லேட்-ஆக்க்ஷன் மருந்து என்பார்களே, அப்படி அந்த மருந்து வேலைசெய்வதும் தெரியாமலே, இத்தனையும் அந்த இரவு செய்திருக்கிறார்! சித்த நோய்க்கு இன்ஜெக்க்ஷன்: முன் வினைக்கு அம்படி; முள்ளான எதிர்புணர்ச்சியே இசையுணர்வான மென்மலராயிருக்கிறது; ப்ரேம அம்ருத ஊட்டும் அமோகம் நடந்திருக்கிறது! அவரை 'இன்னவென்று' புரிந்து கொண்டு ஒன்றினேன் என்பதில்லை. உண்மையான கவிதையெனில் அதன் பொருள் அறிவுக்குப் புரியுமுன்னரே, ஸாரம் உள்ளத்துள் இறங்கிவிட வேண்டுமென்று டி. எஸ். எலியட் சொன்னது போல அவர், 'இன்ன' என்று புரியுமுன்னே 'என்னவோ' அந்த ஸாரமாக உள்ளே புகுந்து விட்டார்!

போகப் போக, புரியக்கூடிய அளவுக்குப் புரியவும் செய்தது. ஒன்றேயான உயிர்த்தத்வம் என்று நான் கருதி வந்ததன் ஸாஷாத் உருவகமே அவரென்று புரிந்தது. அனாமதேய பட்டாளத்தில் ஒருவர் என்று நான் எண்ணியவர், வாஸ்தவத்தில் அந்த அனாமதேய ஏகத்தின் நாம-ரூப சின்னமே என்று புரிந்தது.

அவராகவே உள்ள அவரே சத்தியம் என்றுணர்ந்ததன் உபாங்கமாக அவர் சொல்வதே சட்டம், அவர் செய்து காட்டுவதே உய்யவழி என்றும் தீர்மானமாகி விட்டது. என் நூதனக் கொள்கை புரட்சிக்கு கருத்து யாவும் மாயமே மறைந்தொழிந்தன! இதுவும் முதலில் அந்தரான்மாவில் தன்னியல்பாக பிறந்ததன் உறுதியேயாகும். பிற்பாடுதான் அவரது உபதேசத்தாலும், அருட் சக்தியாலும் இது அறிவுபூர்வமாகப் புரிந்தது.

முக்கியமாக என்ன புரிந்ததென்று சுருக்கமாகச் சொன்னாள்--ஒன்றேயான உயிர் தத்வம் குணம், குறி, இல்லாமல் இருப்பது மட்டுமன்றி, ஒரு நிலையில் அலகிலா லீலா நாட்டக்ருபா நாட்டங்களோடும், இருப்பது. லீலா நாட்டத்தில் ஏகப் பெரு வாழ்வான தன்னை ஏகப்பட்ட சிறு வாழ்வினராக்கி, சிறிய சிறிய தனி மனங்களைக் கொண்டு அவர்கள் கர்மத்திலும், கர்ம பலனிலும், அதன் விளைவான ஜன்ம சூழலிலும் சிக்குமாறு செய்கிறது. இது அப்படியே முடிந்து போகாமல் க்ருபா நாட்டத்தால் அவர்களை இவற்றினின்று மெல்ல மெல்ல மீட்டுத் தன் ஏகப் பெருவாழ்வில் ஐக்யமுற்று உயிர்த் தத்வமாகவே நிற்கவும் வழிகாட்டுகிறது. இங்கேயும் லீலை தொடர்வதால் அச் சிறு வாழ்வினரே ஸ்வதந்திரத் தேர்வும் ஸ்வயப் ப்ரயத்தனமும் செய்வது போலத்தான் காட்டி, அதற்கேற்பவே தன் க்ருபையை சூக்ஷமமாகப் பொழிந்து மேலே மேலே நடத்திச் செல்கிறது. இப்படிப்பட்ட ப்ரயத்தனமான சாதனை 'க்ரமம்' என்று ஆக்கும் பல மார்க்கங்களும் நிச்சயம் இருப்பதாகவே வியவஹாரத்தில் காட்டுகிறது. முற் கர்மாவைக் கழித்துக்கொள்ள உபாயமாக பற்றற்ற கர்மாவையே, மார்கமாக வைத்திருப்பது, பரம சத்தியமே. சிறிய தனி மனதைக் கழித்து கட்டுவதற்குப் பூர்வாங்கமாக சலன மயமான அதனை ஒருமுகப் படுத்த பக்தி மார்க்கத்தையும் அவசியமானதாக வைத்திருக்கிறது.

மனமே மனிதன் என்றுள்ள நிலையில் மனங்கடந்த உயிர்த்த தத்துவத்தை எப்படிப் பிடிக்க முடியும்? அதனால் அம் மனோதீதமே மனத்திற்குப் பிடிபடும் ஸகுண ஈஸ்வரனாகிறது. அது மட்டுமன்றி லீலா ருசியில் அந்த ஒரே ஈஸ்வரன் பல்வேறு மனப்பான்மையினரைக் கவரும் வகையில் பல தெய்வ வடிவங்களாகவும், அவதார ஆச்சார்ய முஹுூர்த்தங்களாகவும் ஆகி, மாந்தரை பக்தி மார்க்கமெனும் அன்பு வழியில் ஈர்த்து, அவர்தம் மனத்தைத் தன்னில் ஒருமுகப்படுத்துகிறான். ஒருமுகப்பட்ட பின்பே மனம் புத்துருப் பெற்று, தன்னையே கடக்கும் சூக்ஷ்ம தத்துவத்தில் பிரவேசித்துத் தன்னை அடியோடு கரைத்துக் கொள்ள முடியும். இதற்கு உபாயமாகவே, ஞான மார்க்கம் வைக்கப்பட்டிருக்கிறது. அதில் மெய்நாட்டத்துடன் முயன்றவனுக்கு க்ருபா சக்தியின் இறுதிக்கு கொடையாக சிறு மனம் சிதைந்து, சிறு வாழ்வு பெரு வாழ்வாகி, சிற்றுயிரே ஏக உயிர் தத்துவமாக நிற்கிறது.

இம் மார்க்கங்களை விவரமான ஒழுங்கு விதிகளாக வகுத்துத் தர அப்பேருயிரேதான் பென்னம் பெரியோர் மூலம் ச்ருதி, ஸ்மிருதிகளான வேத, தர்ம சாஸ்திரங்களைக் கொடுத்திருக்கிறது. அவற்றில், குறிப்பாக, அடித்தளமான கர்மா மார்க்கத்தின் ஆச்சார அனுஷ்டானங்களில் ஏன் இத்தனை வித வித்யாசங்களென்றால், முற் கர்மா யாவருக்கும் சமன் இல்லாமல் வித விதமாக வித்யாஸஃப்பட்டு அதற்கேற்பவே மறு பிறவி வாய்ப்பதால்தான். எப்பிறவியாயினும்

அதற்கான குணத்தையும், கர்மத்தையும் செவ்வை செய்ய அனுகூலமாகவே விதிகள் உள்ளன. வேறெந்த நாட்டிலுமின்றி இங்கு மட்டும் இப்படி இருப்பானேன் என்பதற்கு விடை இந்த சாஸ்திரப்படியே நமது சமூகம் ஒழுகி வந்த வரையில், அந்த ஒழுகு முறை பாதிக்கப்பட்டும், பழைய 'பெடல்' வேகம் தேயாமலிருக்கும். இன்றைக்குங்கூட, இங்கேதான் மற்ற எல்லா நாடுகளையும் விட, அதிகமாக ஞானியரும், யோகியாரும், பக்தரும், சித்தரும் வாழையடி வாழையாகத் தோன்றி, அந்தப் பிற நாட்டினரும், ஆன்மீக பாரதாமே!" என்று கொண்டாடுவதிலேயே இருக்கிறது.

இப்படிப் புட்டுப் புட்டு புரிந்து கொள்ளுமுன்பே, 'இவர்தான் ஜெகத்குரு, இவர் காட்டும் பாதையே ஜெகத்திற்கானது' என்று ஆவி அறிந்து கொண்டது. 'இவர் வழி போனால் உலகு உருப்படாது. நல்ல வேளை, பெரும்பாலான மக்கள் அப்படிப் போகவில்லை!' என்று எண்ணியவன். 'உலகு உருப்பட வேண்டுமானால் இவரின்றி வழியில்லை. அனைத்து மக்களும் இவர் காட்டுவதே கதி என்று சேர மாட்டார்களா? என்று எண்ணலானேன்!

உலகத்தின் கதி கதையும் இருக்கட்டும். சிறியேனான நான் ஏன் அதுபற்றி அதிகம் சொல்ல வேண்டும்? என்கதை என்னவாயிற்று என்று சொல்கிறேன்.

கதை 180 பாகையும் திரும்பி விட்டதாக அந்த நான்கு நாட்களில் தோன்றினாலும் அந்தத் தீவிரம் சிறுக சிறுக குறையத்தான் செய்தது. கர்ம கதியை க்ருபா கதி ஒரே வீச்சில் நசிப்பித்து விடுவதில்லையே! ஆனால், க்ருபா வீச்சு என்று ஒன்று பரம உன்னதமாக இருப்பது தெரிந்தே விட்டது. க்ருபா சக்தி என்பது மெய்யிலும் மெய்யாக நம் ஸ்ரீசரணர்கள் என்ற ரூபத்தில் தாற்காலிகமாகவேனும் "காட்டாதனவெல்லாம் காட்டி", அப்படிக் காட்டியதாலேயே கண்டதை நிரந்தரமாக ஸித்தியாக்கிக் கொள்ளவேண்டும் என்ற விழைவுக்கு வித்திட்டு விட்டது. விழைவை விளைவாக்கிக் கொள்வதற்கு, ஸாதனை முறைமையும் காட்டிக் கொடுத்து, கூடவே துணை நின்று தூண்டிக் கொடுத்து, அவ்வப்போது தன் உடைய அதிசய வீச்சை காட்டி, மாற்றுப் போதுகளிலும் கூட இவன் பாஸ் மார்க்குக்கு கீழே விழாமல் ரக்ஷித்து வருகிறது. இதில் 'ஸ்வய சாதனை என்பது ‘உள உளாக் கட்டைக்குத்தான்' ஸாதிப்பது அவருடைய, அல்லது அவராகிய, க்ருபா சக்திதான். அதனால்தான் துணிவாக பாஸ்மார்க் போட்டுக் கொண்டது. "யவ்வனத்தின் அகராதியில் பெயில் என்ற வார்த்தைக் கிடையாது என்று ஓர் ஆங்கிலக் கவி சொன்னான். க்ருபையின் அகராதியில் கிடையவே கிடையாது.

'தடுத்தாட்கொண்ட புராணம்' என்று தலைப்பிட்டு இருக்கிறேன். ஆயினும் அவ்வாறு ஒரேயடியாக ஆட்கொள்ளப் பட்டவனின் சரணாகத பாங்குக்கு எட்டவே நின்று வந்திருக்கிறேன். அப்படியும் அவர் க்ருபை புரிந்து கொண்டே வந்திருப்பதில்தான் அவரது அருமை மேலும் ஓங்கித் தெரிகிறது. இத்தனை செய்தவர் இனியும் செய்ய வேண்டியதை செய்யாது விட மாட்டார். சுந்தர யுக்தியின் அசல் பிரதிநிதியாயிருந்த விறைப்பு, வீராப்புக்காரனுக்கு பணிவும், கட்டுப்பாடின்றி நிஜ சுதந்திரமான, ஆத்ம சுதந்திரத்திற்கு வழியில்லை என்று உணர்வித்த அந்த விநய விக்கிரகத்தின் முனைப்பே அற்றுப்போன சரணாகத பாங்கையும் புரிவிப்பார்' என்று நம்புகிறேன். "ஏண்டா வந்து தொலைந்தோம்”

என்று முதல் நாள் மாலை எண்ணியவனை மறுநாட் காலையே 'எங்கேடா அந்த மனப்பான்மையைத் தொலைத்தோம்'? என்று தேட வைத்தவராயிற்றே! அவரால் மனத்தையே தொலைக்கச் செய்து அதற்கு அதீதமான அதில் சாஸ்வதமாக சேர்ப்பிக்க மட்டும் முடியாதா என்ன?

நடக்கப் போவதைப் பற்றி இப்போது என்ன? நடத்துபவர் அவர் என்னும் போது அதைப் பற்றி என்ன சிந்தனை? இப்போதைக்கு இதுவரை நடத்திக் கொடுத்திருக்கிறாரே தகுதி பாராமல் வாரிக் கொடுத்திருக்கிறாரே அதற்கு நன்றி! நன்றி! நன்றி! சரணாகதி செய்யாதபோதும், அரணாகக் காக்கும் அந்த ஸ்ரீசரணர்களின் சீரார் சரணங்களில் நமஸ்காரம்.

**சரணம் பவித்ரம் விததம் புராணம் யெத பூதஸ் - தரதி துஷ்க்ருதாநி**
**தேந பவித்ரேண சுத்தேன பூதாஅதி பாபமாநம் ஆராதிம் தாரேம**


- மஹா
நாராயணோபநிஷத்

"பவித்ரமான சரணம் எங்கும் பரவியது. எதற்கும் முந்தையது. அதனால் ஜீவன் தூயோனாகித் தீவினை கடக்கிறான். அத்தகு பவித்ரமான, பரிசுத்தமான சரணத்தால் புனிதராகிப் பாபத்தையும் பகையையும் கடப்போமாக!"

*****

# ஓவியர் சிற்பியின் கைவண்ணம்

நீரின் இனிமையில் இறைவன்,
கூவும் சோலைக்குயில் இசையில் இறைவன்,
வீசும் தென்றல் சுகத்தில் இறைவன்,
ஓடும் நதி அழகில் இறைவன்,
மழலைக் குரலோசையில் இறைவன்,
அதன் கள்ளமில்லா சிரிப்பில் உறைபவன் இறைவன்,
உண்மை அவன் உருவில் அவன் அறிவிலும் !
என்றும் ஒளிர்பவனும் அவனே !!



ஓவியர் சிற்பியின் கைவண்ணம்: அவரின் ஓவியங்களுக்கு என் நமஸ்கரங்கள்.

**பார்வைகள் தான் தூரிகை!**

**நெஞ்சம் தான் காகிதம்!**

*****